விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 07 செவ்வாய்க்கிழமை (20.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122

## கொரோனா யாழில் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்ப்பாணத்தில் நேற்று மட்டும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்வடைந்துள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கல்வியங்காடு பகுதியைச் 19

## யாழ்.பல்கலையில் அன்னை பூபதியின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

நேற்று மதியம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒழுங்கமைப்பில் நினைவேந்தல் இடம்பெற்றது.

அன்னை பூபதியின் உருவ படத்திற்கு மலர் தூவி, ஈகை சுடரேற்றப்பட்டு 19

## ரூ.5 இலட்சத்துக்கு ஆசைப்பட்டு ரூ.10 ஆயிரம் இழப்பு

### வடமராட்சியில் சம்பவம்

(கரணவாய்)

5 லட்சம் ரூபாயுக்கு ஆசைப்பட்டு பத்தாயிரம் ரூபாயினை வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் ஒன்று இழந்த சம்பவம் வடமராட்சிப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது. 19

### பல கோடி பெறுமதியான

## ஆம்பலுடன் முல்லையில் நால்வர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகலில் 2 கிலோ 500 கிராம் நிறை 19

### வடமராட்சியில்

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 19

## அரசு பிளவடைய இடமளியேன்

### பிரதமர் மகிந்த

(கொழும்பு)

மக்களின் அமோக ஆணையுடன் நிறுவப்பட்ட அரசை பிளவடைய இடமளியேன். அரசைக் கவிழ்க்கச் சிலரால் முன்னெடுக்கப்படும் சதி முயற்சியை முறியடித்தே 19

### கூட்டணிக்குள் தொடர்ந்து குழப்பம்

# மகிந்த தலைமையிலான கூட்டம் தோல்வி

### விமல், வாசுதேவ, கம்மன்பில வெளிநடப்பு

### கடும் நெருக்கடியில் ராஜபக்ஷ அரசாங்கம்

(கொழும்பு) ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி கூட்டணியின் பங்காளிக் கட்சிகளிடையே ஏற்பட்ட குழப்பத்தை தணிக்கும் விதத்தில் நேற்று முற்பகல் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய விசேட கூட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா செட்டிகுளத்தில்

## காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் கப்பாச்சி பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 19

### 4 பொலிஸார் உட்பட

## யாழ்ப்பாணத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

4 பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட யாழ்ப்பாணத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் 19

## ஜனநாயக விரோத போக்கில் அரசு

### எரான் எம்.பி

(கொழும்பு)

அரசாங்கம் பல விடயங்களை 19

## மக்கள் ஆணையை மீறினால் ராஜபக்ஷ அரசு கவிழ்வது உறுதி

### அமைச்சர் விமல் வீரவன்ஸ



(கொழும்பு) மக்கள் ஆணையை மீறினால் ராஜபக்ஷ அரசாங்கம் கவிழ்வது உறுதி என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

### முல்லை. நீராவிப்பிட்டிப் பகுதியில்

## கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் கத்திக்குத்துக்கு இலக்காகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் முல்லைத்தீவு நீராவிப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த முகமட் றஜாஜ் (வயது-39) என்ற நபரே இவ்வாறு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சகோதரன் தாக்குதலில் சகோதரி உயிரிழப்பு

## புத்தளத்தில் சம்பவம்

(புத்தளம்)

கற்பிட்டி நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குடா பீ முகாமில் சகோதரனின் தாக்குதலுக்குள்ளான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் சம்பவம் நேற்று முன் தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி ஆலங்குடா பீ முகாமைச் சேர்ந்த விசேட தேவையுடைய ஜனூல் மரிலியா (வய்து 43) என்பவரே தனது சகோதரரின் தாக்குதலில் மரணமாகியுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இரவு ஒரே வீட்டில் வசித்து வந்த சகோதரன், தாய் மற்றும் சகோதரிகளுக்கிடையே வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து ஆத்திரமடைந்த குறித்த சகோதரன் தனது 43 வயதுடைய சகோதரியை இரும்புக் கம்பியினால் கடுமையாக தாக்கியதுடன் 32 வயதான மற்றுமொரு சகோதரியையும், தாயையும் தாக்கியுள்ளார்.

இந்த தாக்குதலில் 43 வயதான பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அவரின் மற்றொரு 32 வய்துடைய சகோதரியும் காயங்களுடன் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன் சந்தேக நபரின் தாயும் சிறிய காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலை நடத்திய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த மாதம் 22.03.2021 (திங்கட்கிழமை)
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### ஸ்ரீரங்கன் ரெங்கசாமி

அவர்களின் அந்தியேட்டி கிரியைக்ள் இன்று (20.04.2021) செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை (21.04.2021) புதன் கிழமை முற்பகல் 11.30 மணியள்வில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வளலாய் வடக்கு,
அச்சுவேலி.

(6638)

குடும்பத்தினர்
077 618 1483

# எதிர்வரும் 27ஆம் திகதி முதல் பல்கலைக்கழகங்களை மீளத் திறக்க முடிவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களையும் மீண்டும் திறக்க தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முதல் அனைத்து ஆண்டுகளுக்குமான பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பல்கலைகழகங்களை ஆரம்பிப்பதாகவும், விடுதிகளை ஆரம்பிப்பதில் சிக்கல் இருக்கும் காரணத்தினால் முதலில் 3 மற்றும் 4 ஆம் ஆண்டு மாணவர்களை மாத்திரம் விடுதிகளுக்குள் உள்வாங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகளை ஆரம்பிக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

வேலையாட்கள் தேவையா?
உங்கள் நிறுவன Vacancy ( Office Works, Driver, Data Entry Operator ) களை நிரப்ப
dewmasweb.com
(6620)
074 138 3368

# சேவை நலன் பாராட்டு

## திரு. எஸ். தோமஸ்யூட்

( கிராம அலுவலர் – நாகர்கோவில் மேற்கு )



வளங்கள் பல நிறைந்திருந்தும் வசதி காண
வடமராட்சி கிழக்கு எனும் பிரிவிலுள்ள
தக்கபல நல் மனிதர் வாழ்ந்து நின்ற
தாளையடி என்னும் ஊரில் தோன்றி வாழ்ந்தாய்

கிராமத்தின் அலுவலராய் ஒன்பது ஆண்டுகள்
வட நாகர் கோவிலிலே சேவை செய்தாய்
இடமாற்றம் பெற்றதனால் எம்மூர் விட்டு
ஏகிடினும் நின் சேவை மன்தில் வாழும்

பாடசாலை நிகழ்வுகளில் பங்கு கொள்வாய்
படிப்பாலே உயர்வு வரும் என்று சொல்வாய்
கோவில்களில் நீயிருப்பாய் கொண்டாட்டங்களில் கலப்பாய்
சாதி மத பேதமின்றி சாவிலும் நீ பங்கு கொள்வாய்

நியாயத்தை துணிந்து எடுத்துச் சொல்லி நிற்பாய்
நீதியற்ற மனிதரையும் திருத்தப் பார்ப்பாய்
முழுமனதாய் சேவை செய்தாய் சலிப்பில்லாமல்
முந்திரியத் தோட்டம் என்றும் உன் பேர் சொல்லும்

சேவை பல செய்திட்ட செயல் வீரன் நீ
செய் நன்றி எதிர்பார்க்கும் குணமே இல்லை
போதும் என்ற மனம் கொண்ட பெருஞ்செல்வம் நீ
போற்றும் பல நற்குணங்கள் கண்டோம் உன்னில்

மனிதநேயம் கொண்டவனே உன்னை நானும்
மகிழ்வுடனே வாழ்த்துவதில் உவகை கொண்டேன்
பொய்யாக நான் எதையும் எழுதவில்லை
போகுமிடமெல்லாம் நீ சிறந்து வாழ்க!.

(C-2009)

செல்வி க. அன்னலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை)
நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுக நகரம் மனு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் குறித்த குழு கடந்த 15 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அசேல சம்பத் பிணையில் விடுதலை

(கொழும்பு)

உணவக உரிமையாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர் 14 ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று மீண்டும் அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (நி-4)

# இரண்டாம் தவணை விடுமுறை ஒரு வாரத்திற்கு மட்டுமே

## -கல்வி அமைச்சர் பீரிஸ்-

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தவணை விடுமுறை ஒரு வாரத்திற்கு மட்டுப்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடத்திட்டத்தை உள்ளடக்கும் வகையில் விடுமுறைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் அனைத்து பல்கலைக்கழகங்களையும் எதிர்வரும் ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் மீளத்திறக்க தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார். (நி-4)

# மனிதாபிமானத்திற்காக போராடியவர்களையே அஞ்சலிக்க முடியாதவர்களாக இருக்கிறோம்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

**(கிளிநொச்சி)**

**அமைதிக்காகவும் மனிதாபிமானத்திற்காகவும் போராடியவர்களையே அஞ்சலிக்க முடியாதவர்களாக தமிழர்கள் இருக்கிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**



நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 33 ஆவது ஆண்டு நினைவு நாளில் அஞ்சலி செலுத்திய பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை தமிழர்கள் நடத்தினார்கள் அந்த அறப் போராட்டத்தில் அன்னை பூபதி இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் நடத்தினார்.

உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்தே போராடினார். அன்னை பூபதியின் வரலாற்று தடங்கள் வித்தியாசமானது . உறுதியான பெண்மணியாக உலகத்தில் வாழ்கிற பெண்களுக்கெல்லாம் முன்மாதிரியாக அறவழியில் தன் மக்களுக்காக, மண்ணுக்காக தன் உயிரைத் தியாகம் செய்த தியாகியாக அன்னை பூபதி மிளிர்கிறார்.

அவ்வாறான தாயின் நினைவு நாளைக்கூட நாம் கொண்டாட முடியாதவர்களாக நசுக்கப்பட்டு இருக்கிறோம். அவர் ஒரு பயங்கரவாதி அல்ல. அவர் ஆயுதம் ஏந்தவில்லை. துப்பாக்கி ஏந்தி யாரையும் சுடவில்லை. யாரையும் சுடவேண்டும் என்று கூட கேட்கவில்லை அவர் கேட்டதெல்லாமே அமைதியையும் மனிதாபிமானத்தினையும் மட்டுமே கோரிக்கையாக முன்வைத்திருந்தார்.

இன்றைய கால கட்டத்தில் நெருக்கடிகளுக்கும் வன்முறைகளுக்கும் தமிழர்களாகிய நாம் கொடுக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரத்து 170 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடு பூராகவும் தற்போது 373 தேசிய பாடசாலைகள் உள்ளன. இதன் பிரகாரம் புதிதாக 797 தேசிய பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளன.

முதல் வேலைத்திட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி சியம்பலாண்டுவ மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது முதல் கட்டத்தில் 125 பாடசாலைகள், தேசிய பாடசாலைக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் தேசிய பாடசாலைகளின் கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படும் சகல பாடசாலைகளுக்கும் 'இணையத்தளம்', 'ஸ்மாட்' வகுப்பறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படுமென்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி-4)

# கொரோனா தொற்று: புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு பூட்டு

(டில்லி)

புதுடில்லியில் உள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகராலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நேற்று திங்கட்கிழமை முதல் அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிலர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவசர தூதரக சேவைகளுக்காக +91-11-23010201 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது slhc.newdelhi@mfa.gov.lk என்ற மின்னஞ்சலிலோ அழைக்குமாறு உயர்ஸ்தானிகராலயம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (நி-4)




யாழ்.பல்கலையில்



வவுனியாவில்



மட்டக்களப்பில்

யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் காணாமல் போனவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டிலும் அன்னை பூபதியின் 33 ஆவதுஅஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் மட்டக்களப்பிலும் இந்நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

(படங்கள்: சதீஸ், சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிவில்லியர்ஸ்- மக்ஸ்வெல் அதிரடி; ஹட்ரிக் வெற்றிபெற்றது பெங்களூர்



சென்னை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 204 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

க்ளென் மக்ஸ்வெல் 78 ஓட்டங்களையும் டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

வருண் சக்ரவர்த்தி 2,பட் கம்மின்ஸ் மற்றும் பிரசீத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 205 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடஸ் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஆந்ரே ரஸ்ஸல் 31 ஓட்டங்களையும் இயுன் மோர்கன் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஜேமிசன் 3,யுஸ்வேந்திர சஹால் மற்றும் ஹர்ஸால் பட்டேல் ஆகியோர் 2, வோஷிங்டன் சுந்தர் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஏபி டிவில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (6)

# ஆண்களுக்கான எல்லே போட்டி வீனஸ் அணி சம்பியன்



பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளனர்.

இறுதியாட்டம் நேற்று முன்தினம் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் பருத்தித் துறை வீனஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து மனோன்மணி இளைஞர் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மனோன்மணி இளைஞர் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 14 பந்துகளில் 8 ஓட்டங்களைப் பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (6)

# போர்முலா-1 கார்ப் பந்தயம்; மேக்ஸ் வெர்டஸ்டபேன் முதலிடம்



ஒவ்வொரு ஆண்டும் 'போர்முலா 1' கார்ப்ப நதயம், 23 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் இரண்டாவது சுற்றான எமிலியா ரோமக்னா கிராண்ட் பிரிக்ஸ் , நேற்று முன்தினம் என்ஸோ இடினோ ஃ பெராரி ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 300.049 கிலோமீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில் ரெட்புல் அணியின் வீரரான மேக்ஸ் வெர்ஸ்டபேன் பந்தய தூரத்தை 2 மணித்தியாலங்கள் 2 நிமிடங்கள் 34.598 விநாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள இரண்டு சுற்றுகளின் முடிவில், லீவிஸ் ஹமில்டன் 44 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ளார். (4-6)

# மொன்டிகார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாஸ் சம்பியன்



கடந்த 10ஆம் திகதி ஆரம்பமான இத்தொடரின் மகுடத்திற்கான ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. பெரும் எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாசும், ரஷ்யாவின் ஹென்ரி ரூபெல்வும் பலப்பரீட்சை நடத்தினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 6-3 என்ற கணக்கில் ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாஸ் வெற்றிகொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாசுக்கு ரூபெல்வ் பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்த எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கிய ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாஸ், இரண்டாவது செட்டையும் 6-3 என்ற கணக்கில் கைப்பற்றிசம்பியன்பட்டத்தை வென்றார். இதன்மூலம் 2.461 மில்லியன் யூரோக்கள் பணப்பரிசை வென்றார். (6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



மன்னார் மாவட்ட பந்தைய புறாக்கள் கழகத்தின் ஏற்பாட்டில் (MANNAR RACING PIGEON ASSOCIATION ) ஏற்பாடு செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான முதலாவது போட்டியானது கடந்த மாதம் இடம் பெற்ற நிலையில் குறித்த போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் வெற்றி பெற்றவர்கள் பணப் பரிசுகள், வெற்றிக் கிண்ணம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (படம்: ஜோசப் நயன்)

# டயலொக் கிண்ண கரப்பந்தாட்ட போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்



யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண அணிகளுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதியது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 29:27 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் நடந்த இரு செற்களிலும் 25:23, 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை மக்களை சமாளிக்கவே புலிப் பூச்சாண்டி காட்டுகிறது அரசாங்கம்

## உடன் நிறுத்த வேண்டும் என்கிறார் சிவாஜிலிங்கம்

(நல்லூர்)

**தென்னிலங்கை மக்களை சமாளிப்பதற்கு வடக்கில் புலி உருவாக்கம் என காட்டுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**




வடபகுதியில் இடம்பெற்றுவரும் கைதுகள் தொடர்பில் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோட்டாபய அரசாங்கம் பதவிக்கு வந்து ஒன்றரை ஆண்டுகள் ஆக முன்னரே மக்கள் மத்தியில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அதாவது பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக காடழித்தல், சிங்கராஜ வனத்தை அழித்தல், வேலையில்லா பிரச்சினை, தமிழர் இடங்களை தொல்பொருள் திணைக்களத்திடம் கையகப்படுத்தல், முக்கிய இடங்களைப் பிற நாடுகளுக்கு விற்றல் போன்ற பல்வேறு மட்டங்களில் மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு எதிராக கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

எது எவ்வாறாயினும் அந்த எதிர்ப்புகளை சமாளிப்பதற்காக வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணன் உட்பட ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என வகைதொகையின்றி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த கைதுகள் தென்பகுதியில் உள்ள எதிர்ப்பினை சமாளிப்பதற்காக இந்த அரசினால் முன்னெடுக்கப்படும் என்றும் ஒரு நாடகமாகவே நாங்கள் பார்க்கின்றோம். இங்கே கோட்டாபய அரசானது புலிகள் மீள உருவாவதை கட்டுப்படுத்துகின்றது. இங்கே தமிழ்த்தேசிய உணர்வாளர்களைக் கட்டுப்படுத்துகிறோம் என்பதை சிங்கள மக்களுக்கு காண்பிப்பதற்காகவே இந்த செயற்பாடுகள் அரசாங்கத்தினால் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த செயற்பாட்டை நாங்கள் அனுமதிக்க முடியாது. சிங்கள மக்கள் எதிர்க்கிறார்கள் என்றால் அவர்களுடைய உரிமை அந்த எதிர்ப்பிற்கான காரணத்தை கண்டறிந்து இந்த அரசாங்கம் சரி செய்ய முன்வர வேண்டும். அதை விடுத்து விட்டு வடக்கில் ஒரு புலிப் பூசசாண்டியைக் காட்டி தமிழ் இளைஞர், யுவதிகளை கைது செய்வதை இந்த அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

அதாவது கைதுகள் இடம்பெற்றாலும் அந்த கைதுகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வருகின்றன. இதன் காரணமாக மூன்று மாதத்திற்கு மேலாக தடுத்து வைத்து விசாரித்து அவரது வாழ்வாதாரம், அவர் குடும்ப நிலைமை பாதிப்படையக் கூடிய வகையில் இந்த அரசாங்கம் செயற்படுகின்றது. எனவே தென்னிலங்கை மக்களை சமாளிப்பதற்கு இங்கே புலி உருவாக்கம் என காட்டுவதை இந்த அரசாங்கம் நிறுத்த வேண்டும் என தெரிவித்தார். (நி-4-33)

**English-Maths Classes**
Gr 6 - G.C.E. O/L
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.
(6633) Tel - 077 089 6147

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் சாரதி சேவைக்கான விலைமனுக் கோரல்-2021

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் நல்லூர் பிரதேச சபையில் 2021 ஆம் ஆண்டுக்கான சாரதி, சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(10)/02/2/ Driver | சாரதி சேவை | 03 |

1) சேவை வழங்குநர்கள், சாரதி, சேவையை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

3) சேவை வழங்குநர்கள் ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணத்தை நல்லூர் பிரதேசசபை, கொக்குவிலில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 20.04.2021 தொடக்கம் 11.05.2021 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.2500.00ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4) பெறுகை ஆவணங்கள் 12.05.2021 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

5) கிடைக்கப் பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**ப.மயூரன்**
**பெறுகைக்குழு தலைவர்,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

## நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி மங்களேஸ்வரி தயாநிதி
அவர்களின் அன்பு மாமியார்

**வடிவேலு பூமணி**

அவர்கள் 21.03.2021 அன்று
சிவபதமடைந்தார் .அவர்களின்
பிரிவுத்துயரால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
(c-2002)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.**

## Organization for Integrated and Sustainable Development (OISD)

ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்திக்கான நிறுவனம்

## பணியாளர்கள் தேவை

மேற்படி OISD நிறுவனமானது கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனமாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வாதாரம் மற்றும் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டங்களில் சேவையாற்றி வருகின்றது. இந்நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கான பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

1. வெளிக்கள உத்தியோகத்தர் (**Field Officer**)
2. நிர்வாக மற்றும் நிதி உதவியாளர் (Admin & Finance Assistant)

**விண்ணப்ப இறுதி திகதி 25.04.2021.**

தபால் முகவரி- **Organization for Integrated and Sustainable Development (OISD)**
No, 19, 1st Lane, Thirunagar North, Kilinochchi.
Email Address: oisd.kili@gmail.com

தொலைபேசி இலக்கம்- 077 957 9180/ +94 21 439 4965
குறிப்பு : வெளிக்கள உத்தியோகத்தர், சுய உதவி குழுக்களுடன் (SHGs) வேலை செய்த அனுபவம் உள்ளவர்கள் விரும்பதக்கது
(6635)

**தலைவர்**
**ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்திக்கான நிறுவனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி மோசடியை நிறுத்து!

## பாதிக்கப்பட்ட தரப்பு போராட்டம்

(சாவகச்சேரி)

**ஊழல், மோசடிகளை மூடி மறைக்கும் தலைமைத்துவம் வேண்டாம், பக்கச்சார்பான அதிகாரிகள் வேண்டாம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து மட்டுவில்-சந்திரபுரம் விவசாய அமைப்பின் பொருளாளர் தலைமையிலான பாதிக்கப்பட்ட தரப்பினர் நேற்று திங்கட்கிழமை காலை தென்மராட்சி பிரதேச செயலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.**



குறித்த போராட்டத்தில் கலந்துகொண்ட விவசாய சம்மேளன பிரதிநிதிகள் "நிதி மோசடிக்காரர்களை முன் நிறுத்து; உடந்தையானவர்களை வெளியேற்று, சந்திரபுரம் விவசாய அமைப்பின் ஊழல், மோசடிகளை மூடி மறைக்கும் தலைமைத்துவம் வேண்டாம்,

விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு சாவு மணி அடிக்காதே, நீதிக்கான குரலை நசுக்காதே பகிரங்க விசாரணை செய், 2011-2019.06.06 வரையான தன்னிச்சையான சந்திரபுரம் விவசாய அமைப்பிற்கு முடிவு கட்ட வேண்டும், கமநல சேவைத் திணைக்களத்தின் பக்கச்சார்பான அதிகாரிகள் வேண்டாம்" உள்ளிட்ட சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்ட நிறைவில் சந்திரபுரம் விவசாய அமைப்பின் பொருளாளரால் தமது பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்று தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷாவிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் தமது கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும், அதற்கு சம்மேளன அங்கத்தவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது நிதி நடவடிக்கைகளை கையாள முடியாத, கிராமத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத கையாலாகாத விவசாய அமைப்பாக சந்திரபுரம் விவசாய அமைப்பு காணப்படுவதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மகஜரின் பிரதிகளை விவ சாய அமைச்சர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

(5-4-30)

# ஏழாலைப் பகுதியில் திருட்டு அதிகரிப்பு

(ஏழாலை)

ஏழாலைப் பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணி யளவில் ஆலய வழிபாட்டை நிறைவு செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபரினால் அறுத்துச் செல்லப்பட்டது.

இதனை அறிந்த அயலவர்கள் திருடனைப் பிடிப்பதற்கு முயன்றபோதும் அது பலனளிக்கவில்லை.

எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் ஏழாலை பெரிய தம்பிரான் ஆலய சித்திரை யாகப் பெரும் பொங்கல் மற்றும் தீ மிதிப்பு என்பன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் பங்கு கொள்ள வரும் பக்தர்கள் தங்க ஆபரணங்கள் அணிவதை இயன்றளவு தவிர்ப்பதோடு தங்களையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

(5-4-26)



அச்சுவேலி கோழி பண்ணையில் 15,000 முட்டைகளை ஒரே நேரத்தில் பொரிக்கவைக்கும் 'இங்குபேட்டர்' இயந்திரம் இயங்க வைக்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் கலந்து கொண்டு இயந்திரத்தை ஆரம்பித்து வைத்தார். (படம்: சிவசாந்தன்)

# பேருந்து- மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ்விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (5-4-60)




# நடமாடும் சேவை நாளை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல் மற்றும் காலம் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் பதிவு செய்தல் தொடர்பான நடமாடும் சேவை நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் பயன்பெற விரும்புவோர் உரிய ஆவணங்களுடன் கரவெட்டி பிரதேச செயலகத்தின் பதிவாளர் கிளை மற்றும் கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் [illegible] அறிவித்துள்ளார். (5-4)

# தந்தை செல்வா நினைவுதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தந்தை செல்வா நினைவுதின நிகழ்வு இவ்வருடம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் பண்டத்தரிப்பு YMCA மண்டபத்தில் (பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலைக்கு அருகில்) எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

யாழ். மாவட்ட தந்தை செல்வா மன்றத் தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (5-4)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு தென்மரா ட்சி மட்டுவில் தெற்கு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள் ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ.வே. தேவேந்திரக் குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறும் "ஆலயதரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது

(கரணவாய்)

பல குற்றச்சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கடந்த சனிக்கிழமை நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது பற்றி மேலும் தெரியவருகையில், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டபோது குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (5-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் கறுப்புப் பணமாகும் சாத்தியம்

## புபுது ஜாகொட எச்சரிக்கை

(கொழும்பு)

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இலங்கையின் பொருளாதாரம் கறுப்புப்பணத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாகக் கருதப்பட வாய்ப்புள்ளதாக முன்னிலை சோஷலிசக் கட்சி தலைவர் புபுது ஜாகொட எச்சரிக்கை விடுத்தார்.**

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னிலை சோஷலிச கட்சியினரினால் அமைதிவழி ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு - புதுக்கடை நீதிமன்றத்திற்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆர்ப் பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கறுப்புப்பண சுத்திகரிப்பு வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர். இந்நிலையில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இத்தகைய வர்த்தகர்களின் தளமாக துறைமுக நகரம் மாற்றப்படும். இதனால் இலங்கையின் பொருளாதாரம் கறுப்பு பொருளாதாரமாகவே கருதப்படும்.

இதேவேளை, இந்த துறைமுக நகர சட்டமூலத்தின் ஊடாக இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையில் காணப்படும் அதிகார போட்டி மேலும் உக்கிரமடைவதுடன், அதன் காரணமாக நாட்டு மக்கள் பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். மேலும் கொழும்பு துறைமுக நகரத்தை சீனாவுக்கு வழங்குவதன் ஊடாக சீனாவின் ஆதிக்கம் நாட்டுக்குள் அதிகரிக்கும். இதனால் இந்நாட்டு தொழிலாளர்களுக்கு காணப்படும் உரிமைகள் இரத்து செய்யப்படவும் வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தார். (நி-4)

# தடுப்பூசி குறித்த உண்மைத் தகவலை அரசு வெளிப்படுத்த வேண்டும்

## பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கம்

(கொழும்பு)

கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது அளவை வெளியிடுவதற்கான சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் உண்மையான நிலையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமென பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தலைவர் உபுல் ரோஹன இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியுள்ளதாவது, "அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசிகளின் இரண்டாவது அளவை வெளியிடுவது தொடர்பாக அரசாங்கம் இன்னும் அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிடவில்லை.

ஏப்ரல் 12 முதல் இரண்டாவது டோஸ் வெளியீடு தொடங்கும் என்று சுகாதார அதிகாரிகள் முன்னர் அறிவித்தனர். இருப்பினும், அவர்கள் இப்போது இது குறித்து ஒரு தெளிவான அறிக்கையை வெளியிடத் தவறிவிட்டனர்.

அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசியில் சில தெளிவற்ற தன்மைகள் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அது தடுப்பூசியின் முதல் அளவை வழங்கியவர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை முதல் டோஸ் வழங்கப்பட்ட அனைவருக்கும், இரண்டாவது டோஸ் கொடுக்க போதுமான தடுப்பூசிகள் இல்லை. இந்தத் தடுப்பூசித் திட்டம் தற்போது ஒரு சிக்கலான நிலையில் உள்ளது.

ஆகவே சந்தேகங்களைத் தீர்ப்பதற்காகத் தடுப்பூசித் திட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை அரசாங்கம் வெளியிட வேண்டும்" என அவர் குறிப்பிட்டார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 18 3/4 செவ் 1 சூரி 9 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: சமுர்த்தி அபிவிருத்தி
எதிர்பார்ப்பு: சாதாரண அழகான பெண்
தொ.இ: B/045

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 66 1/2 செவ் 1 சூரி 4 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.A,Development ASST( Vavuniya)
எதிர்பார்ப்பு; பட்டதாரி, யாழ்.நகரை அண்டிய பகுதியில் இருத்தல் நன்று
தொ.இ: B/149

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 50 3/4 செவ் 7 சூரி 4 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, சாரதி
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், தனியார் சொந்தத்தொழில் மட்டும், உள்நாடு
தொ.இ: B/171

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 49 1/2 செவ் 2 சூரி 12 இல் உயரம்: 5'9"
தகைமை/தொழில்: M.S.C, B.S.C, நிகழ்ச்சித்திட்ட அதிகாரி
எதிர்பார்ப்பு: அழகிய விஞ்ஞான பட்டதாரி பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/206

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 78 செவ் 7 சூரி 12 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: சித்தமருத்துவ வைத்தியர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ:G/3953

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா: 95 செவ் 7 சூரி 11 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MSC, தற்காலிக பொறியிலாளர்
எதிர்பார்ப்பு: U.K, ஜேர்மன், அவுஸ்திரேலியா, ஜேர்மன் செல்லக்கூடிய பொறியிலாளர், உள்நாடும் விரும்பத்தக்கது
தொ.இ: G/3975

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 13 3/4 செவ், சூரி 12 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச நற்குணமுடைய உத்தியோகத்தர், வெளிநாடும் விரும்பத்தக்கது
தொ.இ: G/3986

பிறப்பு: 1975 இந்து நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 30 1/4 செவ் 6 சூரி 11 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.A, M.A தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம், வெளிநாடு ஆயின் A/L போதுமானது
தொ.இ: G/3990

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்காக நாளை காலை 8.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு கொழும்பு பேராயர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)

# திருமதி உலக அழகி சரீரப் பிணையில் விடுதலை



(கொழும்பு)

திருமதி உலக அழகி கரோலின் ஜூரி மற்றும் மொடல் சூலா பத்மேந்திர ஆகியோர் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இம்மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற திருமதி அழகி இறுதிப் போட்டியின் போது இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள்.

கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின் பொலிஸ் பிணையில் குறித்த இருவரும் விடுவிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில், நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, திருமதி உலக அழகி கரோலின் ஜூரி மற்றும் மொடல் சூலா பத்மேந்திர ஆகியோர் நேற்று நீதிமன்றில் ஆஜராகிய நிலையில், அவர்கள் இருவரும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

# கார் மோதி விபத்து பாதசாரி உயிரிழப்பு

## நுவரெலியாவில் பதற்றம்



(ஹற்றன்)

நுவரெலியா, வெலிமடை வீதியில் ஹக்கலை பூந்தோட்டம் அருகில் பொது மக்கள் வீதியை மறித்து பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் காரில் சென்ற நபர் ஒருவர் பாதசாரிகள் மீது மோதியதில் அதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை குறைக்கும் வீதி தடையை ஏற்படுத்தி தருமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அதிகாரிகளின் அலட்சியம் காரணமாகவே குறித்த பகுதியில் விபத்துக்கள் அதிகரிப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்து குறித்த மறியலில் ஈடுபட்டனர். (நி-4)

# புத்தாண்டின் பின் பணிகளை ஆரம்பித்தார் பிரதமர்


(கொழும்பு)

தமிழ் - சிங்கள புத்தாண்டை தொடர்ந்து பிரதமர் அலுவலகத்தின் பணிகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் அலரி மாளிகையில் ஆரம்பமாகின.

பிரதமர் அலுவலக ஊழியர்கள் புத்தாண்டில் தமது பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக பிரதமரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளை கோரி மனித சங்கிலிப் போராட்டம்



(நெளுக்குளம்)

**வவுனியா ஸ்ரீநகர் கிராம மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளை தீர்த்து வைக்குமாறு வலியுறுத்தி மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றை நேற்று வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுத்தனர்.**

இப்போராட்டத்தில் கலந்து கொண்டோர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 70 நாட்களாக நாம் எமது கோரிக்கைகளை முன்னிறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். எனினும் எங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிகாரிகளோ, அரசியல் வாதிகளோ முன்வரவுமில்லை, ஆர்வம் காட்டவுமில்லை.

ஸ்ரீநகர் கிராமம் உருவாகி 25 வருடங்கள் கடந்தும் எமது மக்களுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான காணிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கல், வீடு அற்றவர்களுக்கு வீட்டுத்திட்ட உதவி, சீரற்ற வீடுகளை திருத்தம் செய்ய நிதி உதவி, பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி கட்டமைப்பு போன்ற பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. குறித்த கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 70 நாட்களாக எமது கிராமத்தில் நாம் போராடி வருகின்றோம்.

எமது கோரிக்கைகளுக்கு பதில் கிடைக்காத பட்சத்திலேயே இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுத்துள்ளோம்.

இதையும் அரச அதிகாரிகள் கண்டு கொள்ளாத பட்சத்தில் எமது போராட்ட வழவத்தை வேறுபட்ட வடிவத்தில் தொடர்ந்து முன்னெடுத்துக் கொண்டே இருப்போம் எனத் தெரிவித்தனர்.

நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்ததுடன், ஸ்ரீநகர் மக்கள் மனிதர்கள் இல்லையா, காணி உறுதிப்பத்திரத்தை வழங்கு, 25 வருடங்களாக எம்மை ஏமாற்றுவது சரியா, நியாயமான கோரிக்கைகளிற்கு தீர்வு என்ன போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர். (5-4-299)

# வீடு புகுந்து தாக்குதல் இருவர் காயம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் இளைஞர் குழு ஒன்று வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் இருவர் காயமடைந்துள்ளதுடன் வீட்டுப் பொருட்களும் சேதத்திற்குள்ளாயின.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் இரவு வவுனியா மகாரம்பைக் குளத்தில் உள்ள வீடொன்றிற்குள் வாள் மற்றும் கத்திகளுடன் உட்புகுந்த குழுவினர் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இருவர் காயமடைந்ததுடன் வீட்டின் பொருட்களையும் அடித்து உடைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவர்கள் கைவிட்டு சென்ற கத்தி ஒன்றையும் தலைக்கவசம் ஒன்றையும் மீட்டனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-299)

# தவிசாளர் தெரிவு நாளை மறுதினம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு நாளை மறுதினம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முன்னாள் தவிசாளர் கனகையா தவராசா தவிசாளர் பதவியில் இருந்து விலகியதையடுத்து இத்தெரிவு இடம்பெறவுள்ளது.

இப்பதவிக்கு இருவர் போட்டியிடுகின்றனர். இப்பிரதேச சபையில் 24 உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-350)

# குரங்கு தொல்லையை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை


(அக்கராயன்)

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள் எதிர்கொள்ளும் குரங்குகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துமாறு பெற்றோர்களினால் வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகளிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த பத்தாண்டுகளாக குரங்குகளின் தொல்லைகள் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் வகுப்பறைகளுக்குள் நுழையும் குரங்குகள் மாணவர்களின் உணவுகளை உண்பதுடன் மாணவர்களின் குடிநீரினை அருந்துவதாகவும் பாடசாலை நிர்வாகம் கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் மனுக்கள் கையளித்து குரங்குகளைக் கட்டுப்படுத்தும்படி கோரிக்கை விடுத்திருந்தனர்.

கிளிநொச்சி குளத்தின் பக்கமாக இருந்தே பெருமளவு குரங்குகள் கிளிநொச்சி பாடசாலை சூழலுக்கு வருகை தருவதாகவும் பெற்றோர்களினால் கல்வி அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-4-350)

# உடும்புகளுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

வட்டக்கச்சி புதுக்காட்டு பகுதி காட்டில் ஐந்து உடும்புகளை வேட்டையாடி இறைச்சியாக்குவதற்கு தயாராக வைத்திருந்திருந்த நிலையில் கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வீட்டினை சோதனையிட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த ஐந்து உடும்புகளை உயிருடன் மீட்டதுடன் நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவித்ததுடன் எதிர்வரும் ஐந்தாம் மாதம் 10 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த உடும்புகள் வனத்தில் விடுமாறும் பணித்த நீதவானின் கட்டளைக்கமைய உடும்புகள் சுண்டிக்குளம் சரணாலயத்தில் நேற்று விடப்பட்டன. (5-4-316-316)

# உ.சு. ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத தடுப்பூசியை ஏற்றுக்கொள்ளமாட்டோம்

## சிவாஜிலிங்கம்



(யாழ்ப்பாணம்)

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத சீன தடுப்பூசியை அரசு இலங்கை மக்களுக்கு வழங்க முயற்சிக்கிறதா? என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

"இலங்கையில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மந்த கதியிலேயே நடைபெறுகிறது.

குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட மக்களுக்கே தற்போது அதிகமாக தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்படாத சீன தடுப்பூசியை எங்கள் தலையில் கட்டப்பார்க்கின்றீர்களா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால், அது சீன தடுப்பூசியாக இருந்தாலும் எந்த தடுப்பூசியாக இருந்தாலும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்காத எந்த விடயத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

உலக சுகாதார நிறுவனம் 20 இலட்சம் தடுப்பூசிகளை வழங்க முன்வந்துள்ளது. எனவே அனைவருக்கும் தடுப்பூசியைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் வகுக்க வேண்டும்.

சிறிய தொற்று வந்தபோது முழு நாட்டையும் முடக்கினீர்கள். யாழ்.குடாநாட்டினை முடக்கினீர்கள். தற்போது என்ன செய்துகொண்டு இருக்கின்றீர்கள்?

எனவே உடனடியாக அரசாங்கம் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களின் உயிர்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தடுப்பூசியைச் செலுத்தும் திட்டத்தை விரைவாக செய்யுங்கள். ஏழை மக்களுக்கு இலவசமாகச்செய்யுங்கள், குறைந்த விலையில் தடுப்பூசிகளை வழங்கினாலும் பெரும்பாலான மக்கள் அதனைப் பெற்றுக் கொள்வார்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

20.04.2021
சித்திரை 07, செவ்வாய்க்கிழமை
அட்டமி முன்னிரவு 8.07 மணிவரை
பூசம் பின்னிரவு 3.37 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம்:-பூராடம்

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப காரியச் செலவுகள் கைகூடும்.


ரிஷபம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூல முண்டு, நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

உறவினர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பொன்னான நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.


கடகம்

தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.


சிம்மம்

சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்க முற்படுவீர்கள்.


கன்னி

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


துலாம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.


தனுசு

காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், திட்டமிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.


மகரம்

மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், உறவினர்களின் வருகையுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


மீனம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், அரை குறையாக இருந்த பணிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

ஆபத்திற்கு உதவுபவனே உண்மையான நண்பன்

# சீன ஈழம் உருவாகுகிறதாம்

## மரிக்கார் கொதிப்பு

(கொழும்பு)

**பொருளாதார நகரம் போன்ற நகரத்தை உருவாக்குவதை தாம் எதிர்க்கவில்லை எனவும் பொருளாதார நகரம் என்ற பெயரில் சீன ஈழம் ஒன்றை உருவாக்கும் முயற்சியை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார நகரம் என்ற பெயரில் தமது உற்ற நண்பர்களின் கறுப்பு பணத்தை வெள்ளை பணமாக மாற்ற முயற்சித்து வருகின்றனர்.

நாட்டை சீனாவுக்கு காட்டிக் கொடுப்பதையும் நாட்டுக்கு பொறுப்புக் கூறாத சீன ஈழத்தை உருவாக்குவதையுமே நாங்கள் எதிர்க்கின்றோம் என மரிக்கார் தெரிவித்தார். (நி-4)

# கடமைகளை பொறுப்பேற்றார் மொஹான் சமரநாயக்க



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளரான மொஹான் சமரநாயக்க, அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். (நி-4)

# ரூபாயின் பெறுமதி நிலையான மட்டத்தை அடையும்

## நிதி இராஜாங்க அமைச்சர் கப்ரால்



(கொழும்பு)

இந்த வருடம் நிறைவடைவதற்குள் ரூபாயின் பெறுமதி நிலையான மட்டத்தை அடையும் என எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதியானது 'இந்த வருடம் நிறைவடைவதற்குள் 175 முதல் 180 ரூபாய்க்கு இடைப்பட்ட பெறுமதியை அடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவினால் வழங்கப்பட்ட கடன் தொகை காரணமாக நூற்றுக்கு 20 வீத வெளிநாட்டு ஒதுக்கம் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (நி-4)

# கடுமையான கட்டுப்பாடுகள் மீண்டும் நடைமுறைக்கு

(கொழும்பு)

உலகளவில் கொரோனா தொற்று அதிகரிப்பதை கருத்திற்கொண்டு வெளிநாட்டவர்கள் இலங்கை வருவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளதாக தொற்று நோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றின் மூன்றாவது மற்றும் நான்காவது அலை காரணமாக பல நாடுகள் பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)

# எரிபொருள் இறக்குமதி குறைக்க அரசு முயற்சி




(கொழும்பு)


இந்தாண்டு முதல், இலங்கைக்கு இறக்குமதி செய்யும் மசகு எண்ணெய் மற்றும் எரிபொருளை முடிந்தவரையில் குறைக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக தகவல்கள் வெளியாகின.

அரசாங்கத்திடம் அந்நிய செலவணி கையிருப்பு குறைந்துள்ளமையே இதற்கு காரணம். இந்தாண்டு எரிபொருளை இறக்குமதி செய்ய 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## துரோணரை பிரமிக்க வைத்த அர்ஜுனன்



மன்னன் திருதராஷ்டிரன் தனது சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான்.

எதிரே இருந்த துரோணாச்சாரியாரிடம் பூடகமாக பேசத் தொடங்கினான்.

"துரோணாச்சாரியரே! எனக்கு ஒரு சந்தேகம்'.

"கேளுங்கள் மன்னா!'

"சீடர்களிடம் பாரபட்சம் காட்டாமல் வித்தை கற்பிப்பது தானே நல்ல ஆசானின் இலக்கணம்?'

"ஆம் மன்னா! அதில் சந்தேகமேயில்லை'. "

தாங் கள் நல்லதோர் ஆசானாகத் திகழ வேண்டும்என்பதே எனது விரு ப்பம்' என மன்னர் கூற திடுக்கிட்டார் துரோணர்.

தன் மீதே மன்னர் சந்தேகப்படுவார் என்று எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

"துரோணரே! பாண்டவர்களையும் எனதருமை பிள்ளைகளை யும் சரிசமமாக பாவி த்து வித்தைகளைக் கற்பிக்க வேண்டும்'.

பாண்டவர்கள் மீது பொறாமை கொண்ட துரியோதனன் தன்னைப் பற்றி அரசனிடம் குறை கூறி இருக்க வேண்டும் என்று உணர்ந்தார் துரோணர்.

"மன்னிக்க வேண்டும் மன்னா! நான் எவ்வித பாகுபாடும் காட்டுவதில்லை. ஆர்வம், முயற்சி, உத்வேகம், தனித்த ன்மை போன்ற இயல்புகள் எல்லோரிடமும் ஒரே மாதிரி அமைவதில்லை என்பதையும் தாங்கள் உணரவேண்டும்'

"மேலும், கௌர வர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டார்.

மறுநாள் காலை பாண்டவர்களும் கௌரவர்களும் வித்தைகள் பயில்வதற்கு வந்து சேர்ந்தனர் துரோணாச்சாரியாரை வணங்கினர்.

(தொடரும்)

# மகாபாரதம்




கௌரவர்களின் எஞ்சிய வீரர்கள் சிலர் தர்மரிடம் வந்து "துரியோதனனைக் காப்பாற்றுங்கள்" என முறையிட்டனர்.

ஆனால்பீமனோ "அவர்கள் தீவினையின் பலனை அனுபவிக்கிறார் கள். அனுபவிக்கட்டும்" என்றான். தம்பி ஆபத்தில் யார் இருந்தாலும் உதவ வேண்டுவது உலக இயல்பு.

மேலும் இப்போது நம் சகோதரர்கள் ஆபத்தில் சிக்கியுள்ளனர். அவர்களை உடனே காப்பாற்ற வேண்டும் என்றார் தருமர்.

இப்படி இவர்கள்பேசிக் கொண்டிருந்த போது துரியோதனனின் அபயக் குரல் கேட்டது.

"சகோதரர்களே எங்களையும் எங்கள் மனைவியரையும் கந்தர்வர்கள் கட்டி இழுத்துச் செல்கிறார்கள். உடனே வந்து காப்பாற்றுங்கள்" உடன் பாண்டவர்கள் கந்தர்வர்களை தடுத்து நிறுத்தி பலரை அழித்தனர்.

அப்போது அருச்சுனனுக்கு சித்திரசேனன் தனக்கு இந்திரலோகத்தில் பல நுணுக்கங்களை போதித்தவன் என்ற உணர்வு வர அவன் பாதம் பணிந்து [illegible]

"அருச்சுனா...இந்த துரியோதனன் உங்களை அவமானப்படுத்த வந்தான். அதை அறிந்த தேவர் கோமான் அவன் கூட்டத்தை கட்டி இழுத்துவர என்னைப் பணித்தான்" என்றான் சித்திரசேனன்.

பின்னர் தருமர் கேட்டுக் கொண்டதற்கிணங்க துரியோதனன் கூட்டம் விடுவிக்கப்பட்டது.

போரில் இறந்த கந்தர்வர்களை இந்திரன் மீண்டும் உயிர் பிழைக்க வைத்தான்.

நாணித் தலை குனிந்திருந்த துரியோதனனை நோக்கி தருமர் "நகரம் சென்று நல்லாட்சி செய்வாயாக" என்றார்.

புறங்கொடாப் போர் வீரன் என்ற பெருமித வாழ்வு பறிபோக கர்ணனிடம் துரியோதனன் புலம்பினான். பின் துச்சாதனனை நோக்கி" தம்பி நீ ஆட்சியை மேற்கொள் நான் உயிர் துறக்கப் போகிறேன்" என்றான்.

பதிலுக்கு, கர்ணன் "இதுவா சத்திரியர் இயல்பு. நாம் இப்போது சந்தித்தது இறுதிப் போர் அல்ல" என்றான். கர்ணன் மேலும் துரியோதனனுக்கு உற்சாகம் ஊட்டினான். (தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தில் தடம்புரண்டது தொடரூந்து

- 11 பேர் உயிரிழப்பு
- சுமார் 100 பேருக்கு காயம்

(ஜெய்ரோ)

**எகிப்தில் தொடரூந்து ஒன்று தடம்புரண்டதில், 11 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றனர். இவ்விபத்தில் 100க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**





தலைநகர் கெய்ரோவுக்கு வடக்கே உள்ள பன்ஹா நகரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில், 4 தொடரூந்து பெட்டிகள் தண்டவாளத்தைவிட்டு தடம்புரண்டுள்ளதாக, அந்நாட்டு தொடரூந்து திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்துக்கு குறைந்தது 50 நோயாளர் காவு வாகனங்கள் அனுப்பப்பட்டதுடன், காயமடைந்தவர்கள், அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதாக எகிப்தின் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அத்துடன், விபத்தினால் தொடரூந்துக்கு உள்ளே சிக்கியுள்ளவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன. (நி-4-8)

## ஒரு வாரத்திற்கு ஊரடங்கு அமுல்

(டில்லி)

கொவிட்-19 தீவிரம் காரணமாக இந்தியாவின் டில்லி நகரம் நேற்று முதல் ஒருவாரத்திற்கு முடக்கப்படவுள்ளது.

நேற்று இரவு 10 மணி முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை டில்லி நகரம் முடக்கப்படவுள்ளதாக முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார். தற்போது டில்லி நகரம் முடக் கப்படாவிட்டால் பேரழிவை சந்திக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டில்லியில் நாள் ஒன்றில் அடையாளங்காணப்பட்ட அதிகளவான கொவிட்-19 தொற்றுறுதியானவர்கள் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளனர்.

அந்த நகரத்தில் நேற்று முன்தினம் 25 ஆயிரத்து 462 பேருக்கு தொற்றுறுதியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 035 109**

**தொற்று :-142 102 302**

**(நேற்றைய நிலவரம்)**

## அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி போடுவோருக்கான வயதெல்லையை 40 ஆகக் குறைத்தது ஒன்ராறியோ

(ஒட்டவா)

ஒன்ராறியோவில் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி போடுவதற்கான வயதெல்லை குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இந்தத் தடுப்பூசி போடுவதற்கான பரிந்துரை இருந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி போடப்படவுள்ளது. இதனை கனேடிய சுகாதார அமைச்சர் கிறிஸ்டின் எலியட் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை உறுதிப்படுத்தினார்.

ஒன்ராறியோவில் தொடர்ந்து கொவிட்-19 தொற்று நோயாளர் தொகை அதிகரித்து வருகிறது. அத்துடன், மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர் தொகையும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் தொற்று நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடும் பணிகளை அதிகரிக்குமாறு மாகாண அரசுக்கு பரவலாக அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது.

இதனையடுத்தே தடுப்பூசிகளை அதிகமானவர்களுக்குப் போடும் வகையில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கான வயதெல்லை 55 வயதுக்கு மேல் என இருந்த நிலையில் தற்போது 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் போட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-8)

# டேபிள் மலையில் பரவிய தீ பல்கலை. வளாகத்திலும் பற்றியது

## வரலாற்றுச் சிறப்புமிக்க நூல்கள் தீயினால் சேதமடைந்தன

(கேப்டவுன்)

தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனிலுள்ள டேபிள் மலை தேசிய பூங்காவில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. குறித்த காட்டுத்தீ கேப்டவுன் பல்கலைக்கழக வளாகத்தில் பரவியுள்ளது.



அரசியல்வாதியான சிசில் ரோட்ஸ் நினைவுச்சின்னம் அருகே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக தீ விரைவாக பரவியுள்ளது. இதனால் அங்கிருந்த உணவகமொன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

பல்கலைக்கழகத்தின் வரலாற்று சிறப்புமிக்க நூலகம், மோஸ்டெர்ட்ஸ் காற்றாலை மற்றும் பிற கட்டடங்களும் தீயினால் சேதமடைந்துள்ளன.

அப்பகுதியில் வசிப்பவர்களுக்கு காற்றில் கரும்புகை மற்றும் தூசுத்துகள்கள் வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

தீயை அணைக்கும் பணியில் நான்கு ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளதோடு, 200 தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இந்நிலையில், இரண்டு தீயணைப்பு வீரர்கள் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளளார்கள். தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர மூன்று நாட்கள் தேவைப்படும் என தீயணைப்பு வீரர்கள் தெரிவித்துள்ளார்கள். (நி-4-8)

## வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார் முரளி

(சென்னை)

இலங்கை கிரிக்கெட் அணியின் வீரரும், சுழல்பந்து வீச்சு ஜாம்பவானுமான முத்தையா முரளிதரன் நேற்று முன்தினம் சென்னையில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருதிக்குழாய் சீரமைப்பு சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றைய தினம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-4-8)

# ஒட்சிசன் பற்றாக்குறையால் 6 கொரோனா நோயாளிகள் பலி

(டில்லி)

நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றால் தீவிர பாதிப்புக்கு ஆளாவோருக்கு ஒட்சிசன் செலுத்துவது சிகிச்சையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மத்திய பிரதேச மாநிலத்தில் ஒட்சிசன் பற்றாக்குறையால் கொரோனா நோயாளிகள் 6 பேர் கடந்த சனிக்கிழமை பரிதாபமாக இறந்தனர்.

ஒட்சிசன் பற்றாக்குறையை தவிர்க்க, அதைப் பயன்படுத்துவதில் கவனமாக இருப்பதுடன், அதன் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று பிரதமர் [illegible] [illegible].

இருப்பினும் இதற்கு மத்தியில் மராட்டிய மாநிலம், நாலசோப்ராவில் 2 தனியார் மருத்துவமனைகளில் ஒட்சிசன் பற்றாக்குறையால் 10 கொரோனா நோயாளிகள் கடந்த சில தினங்களுக்கு முன் பலியாகினர். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## முதலமைச்சர் எடப்பாடி வைத்தியசாலையில் அனுமதி

(சென்னை)

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சென்னை அரும்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு குடல் இறக்க பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து சிறிய அறுவை சிகிச்சை செய்வதற்காக மருத்துவர்களின் ஆலோசனைப்படி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு கொரோனாத் தொற்று பாதிப்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை உள்ளதால் தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாது- எச்சரிக்கின்றார் தேரர்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர விவகாரத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது என்பதற்காக தான்தோன்றித்தனமாக செயற்பட இடமளிக்க முடியாது.

நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்காக மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என நாட்டை பாதுகாக்கும் தேசிய திட்டத்தின் தலைவர் எல்லே குணவங்க தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள நாட்டை பாதுகாக்கும் தேசிய திட்ட அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்



கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. கருத்துக்களை குறிப்பிட்டவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை விடுத்து அரசாங்கம் உண்மை காரணிகளை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இச்சட்ட மூலத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினர் உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்விடயம் குறித்து மக்களை ஒன்றிணைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

கொழும்பு துறைமுக நகர விவகாரத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். விடப்படும் ஒரு சில தவறுகள் எதிர்கால தலைமுறையினருக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது. அதற்கு இடமளிக்கவும் முடியாது. பாராளுமன்றில் பெரும்பான்மை பலம் உள்ளதால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்படக் கூடாது எனத் தேரர் தெரிவித்தார். (நி-4)

# புதிய தொடர்பாடல் சாதனம் சீனாவால் அன்பளிப்பு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் நிலையங்களின் தொடர்பாடல் வசதியை நவீனப்படுத்தும் வகையில் சீனா புதிய தொடர்பாடல் சாதனத்தை அன்பளிப்பு செய்துள்ளது.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெண்க் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையிலேயே சீனா இந்த அதிரடி நடவடிக்கையை செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வழங்கப்பட்ட தொடர்பாடல் சாதனம் ஊடாக பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு சிறந்த முறையில் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# மீண்டும் அதிகரிக்கும் கொரோனா தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் வைரஸ் தொற்று தாக்கமானது திடீரென மீண்டும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நேற்று முன்தினம் மாத்திரம் 357 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இந்த விடயத்தை கோவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களில் 260 பேர் ஏற்கனவே கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து எச்சரிக்கையுடன் நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-4)

# இலங்கையரின் சடலம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)


இத்தாலியில் இருந்து, துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்கு உள்ளான 32 வயதான இலங்கையரின் சடலம் இத்தாலியில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொண்டு வரப்பட்டது.

கம்பஹா- நெடுங்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த இவர், இத்தாலியின் ஏப்ரிலியா நகரில் பணிபுரிந்து வந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலைய பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளதுடன் நீதிமன்றத்திற்கு அறிவித்த பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2289

### செரோன்





### சிவானு





### விரு




### தனோஜ்




### வக்சலன்




### அபிநயா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை ... www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துறைமுகம் சீன வசமானால் இலங்கை போர்க்களமாகும்

## சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்துக்கான உரிமம் நாட்டு மக்களை சார்ந்ததாகும். அதனை சீனாவுக்கு வழங்குவதன் ஊடாக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் எதிர்ப்புகளை இலங்கை சந்திக்க நேரிடும்.

இதனால் ஏற்படக் கூடிய போரில் எமது நாடே யுத்தகளமாக மாறும். எமது துறைமுகங்களில் சீன போர்க் கப்பல்களை நிறுத்தி வைக்கக் கூடும்.

எனவே இவ்வாறான விடயங்கள் குறித்து அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பில் அரசாங்கம் உண்மையை மறைக்கும் வகையிலேயே செயற்பட்டுள்ளது. விடுமுறை தினங்களை கருத்தில் கொண்டு இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதன் மூலம் அது தெளிவாகியுள்ளது.

இந்நிலையில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அது நாட்டின் சுயாதீனத் தன்மைக்கு பெரும் அச்சுறுத்தலாகும் எனவும் குறிப்பிட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலமானது நாட்டின் அரசியலமைப்புக்கு முரணான வகையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குச் சொந்தமான வளங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்துக்கான உரிமை நாட்டு மக்களை சார்ந்ததாகும்.

அதனை இன்னுமொரு நாட்டுக்கு வழங்குவதால் எமது சுயாதீன தன்மைக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும். துறைமுக நகரத்தை சீனாவுக்கு வழங்குவதன் ஊடாக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிடம் நாம் எதிர்ப்பை சந்திக்க நேரிடும்.

இந்த நாடுகளுக்கிடையில் போர் ஏற்பட்டால் எமது நாடே யுத்தகளமாக காணப்படுவதுடன், சீனா எமது துறைமுகத்தில் அதன் போர்க் கப்பல்களை நிறுத்தி வைக்கக் கூடிய வாய்ப்புள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிந்தித்து செயற்பட வேண்டும் என மேலும் தெரிவித்தது. (நி-4)

# இதுவரை சுற்றுலாப் பயணிகளில் 78 பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளில் இதுவரையில் 78 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிசெம்பர் 28 முதல் ஏப்ரல் 14 வரையான காலப்பகுதியில் 11 ஆயிரத்து 961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில் 78 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இருப்பினும் அவர்களுடன் உள்ளூர் மக்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டிற்கு திரும்பிய அதிகமான இலங்கையர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு திரும்புபவர்களில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், நாடு திரும்புபவர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து ஆலோசித்து வருவதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2ம் வருட நினைவு தினம் நாளை

## தேவாலயங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 2 ஆம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு விசேட ஆராதனை மேற்கொள்வதற்கு அனைத்து தேவாலயங்களிலும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் உள்ள தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு விடுத்துள்ளது.

கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் நினைவாக விசேட ஆராதனைகள், மத நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

எனவே நாளை 21 ஆம் திகதி, விசேட பாதுகாப்பு வழங்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் விசேட ஆராதனைகள் நடைபெறவுள்ளமையினால், தேவாலயத்தை சுற்றியுள்ள சில வீதிகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் மூடப்படுமென அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இழப்பது எப்படி?

ஒரு ஆள் இராமகிருஷ்ணரைத் தேடி வந்தான். அவன் கையில் ஆயிரம் பொற் காசுகள் வைத்திருந்தான். அதை அவரிடம் கொடுத்து இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவாக கேட்டுக் கொண்டான்.

அவர் பார்த்தார்... இது எனக்குத் தேவை இல்லை. ஆனாலும் உன் மனதை புண்படுத்த நான் விரும்பவில்லை. அதனால் நீ கொடுக்கின்றதை வாங்கிக் கொள்கின்றேன் என்றார். வாங்கிக் கொண்டார். பின்பு கேட்டார்... இதோ பார்... இனிமேல் இது எல்லாம் என்னுடையது தானே...? என்றார்.

ஆமாம். அதையெல்லாம் நான் உங்களுக்கே கொடுத்துவிட்டேன் என்றான். சரி...இப்பொழுது நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும் என்றார். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க என்றான்.

இந்த நாணயங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் கங்கை நதியில் எறிந்துவிட்டு வா என்றார்.

இவனுக்கு அதிர்ச்சி "என்ன செய்வது... இனிமேல் அது முடியாது என்றும் சொல்ல முடியாது. ஏன் என்றால் அந்த நாணயங்களையெல்லாம் அவருக்கே கொடுத்துவிட்டான். இனிமேல் அதெல்லாம் இவனுடையது இல்லை" பேசாமல் அவ்வளவையும் அள்ளிக் கொண்டு ஆற்றங்கரைக்குப் போனான். போனவன் பல நேரம் திரும்பி வரவில்லை. இராமகிருஷ்ணருக்குச் சந்தேகம்.

என்ன ஆகிவிட்டது அந்த மனிதனுக்கு? காசுகளோடு கங்கையில் குதித்துவிட்டானா? போகும்போதே ஒரு மாதிரியாகத்தான் போனான். போய் என்ன என்று பார்த்துவிட்டு வா என்றார் அங்கே இருந்த ஒருத்தரிடம். அவர் போய் பார்த்தார். பின்பு திரும்பி வந்தார். விபரத்தைச் சொன்னார்.

அவன் கங்கைக் கரையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு நாணயமாக ஒன்று இரண்டு என்று எண்ணி வீசிக் கொண்டிருக்கின்றான். அவனைச் சுற்றி ஒரு கும்பல் நின்று கொண்டு அவனைத் தடுத்துக் கொண்டிருக்கிறது என்றார்.

இதைக் கேட்டதும் இராமகிருஷ்ணரே புறப்பட்டு அங்கே போனார். என்ன இப்படி செய்து கொண்டிருக்கின்றாய்? நான் உன்னை அந்த நாணயங்களை கங்கையில் வீசியெறியச் சொன்னேன். நீ ஏன் அதை எண்ணிக் கொண்டிருக்கின்றாய்? என்றார்.

பழக்கம் தான் காரணம். நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக சேமித்து வைத்தேன். இன்றைக்கு என்னிடம் நிறைய இருக்கு. உங்களுக்கு ஆயிரம் நாணயங்களைக் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை என்றான்.

இப்பொழுது இராமகிருஷ்ணர் சொன்னார்...

ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் சம்பாதித்திருந்தால் நீ எண்ணுவது பொருத்தமாக இருக்கும். எல்லாவற்றையும் இழக்கும் போது எண்ணிக் கொண்டு இருப்பது என்பது சரியான மூடத்தனம். ஒரே தடவையா எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிடு என்றார்.

இது இழப்பது என்கின்ற ஓர் உயர்ந்த நிலை. இதை எங்கள் யதார்த்த வாழ்க்கையில் சம்பந்தப்படுத்திப் பார்த்து குழப்பிக் கொண்டிருக்கக்கூடாது.

இழக்குகின்றேன் என்று சொல்லிவிட்டு இருக்கின்ற காசையெல்லாம் ஆற்றிலேயும் குளத்திலேயும் எறிந்து கொண்டிருந்தால் பார்க்கிறவர்கள் சந்தேகப்படுவார்கள்.

இதிலே நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னென்றால் எதையாவது ஒன்றை இன்னொருத்தருக்குக் கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதை மனப்பூர்வமாக கொடுக்க வேண்டும்.

கொடுத்துவிட்டு அதையே நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது.

எங்கள் ஆள் ஒருத்தர் ஒரு நூறு ரூபாய் காசை தன்னுடைய நண்பர் ஒருத்தரிடம் கொடுத்து இது உனக்குத்தான் வைத்துக் கொள் என்றார். அவர் பார்த்தார்...இது இனிமேல் எனக்குத்தானே சொந்தம்? என்றார். ஆமாம் என்றார்.

அப்படி என்றால் எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும் என்றார். சொல்லுங்கள் செய்கின்றேன் என்றார்.

இந்த நூறு ரூபாய் காசை தீ வைத்துக் கொளுத்திவிடு என்றார்.

இவர் அதிர்ச்சியாகி அவரைப் பார்த்தார்.

இப்பொழுது அவர் சொன்னார்...நீ எனக்கு அன்பாக கொடுத்தது இது. கள்ள நோட்டு என்பதும் எனக்குத் தெரியும். சீக்கிரம் கொளுத்து என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 18 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



உசாத்துணைப் பிரிவில் ஏக காலத்தில் அறுபது வாசகர்கள் அமர்ந்து படிக்க ஏதுவாகப் போடப் பட்டிருந்த தனித்தனி மேசைகளும் கதிரைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இவற்றைப் பயன்படுத்திய அறிவுத்தாகம் கொண்ட அத்தனை வாசகர்களும் இன்று எங்கெங்கு அலைகின்றனரோ, தமது அறிவுத் தேட்டத்திற்கு. நான் அறிந்தமட்டில் இலங்கையிலேயே மிகச் சிறந்த சிறுவர் நூலகப் பிரிவிலிருந்த 8995 நூல்களையும் முற்றாக இழந்துவிட்ட ஆயிரக்கணக்கான பிஞ்சு உள்ளங்கள் எவ்வாறு ஏங்கித் தவிக்கின்றனவோ?

மலர்ந்த முகங்களுடன் கூடிய சிறுவர் சிறுமியரின் கலகலப்பான இந்தப் பிரிவில் சித்திர நூல்களில் சிந்தையை இழக்கவும், இனிக்கும் கதைகள் படித்து இன்புற்றிருக்கவும், நூலக உதவியாளர்கள் கதை சொல்லக் கேட்டு கற்பனை உலகில் சஞ்சரிக்கவும் வரும் அக்குழந்தைகளை எண்ணும் போது எவ்வாறு தான் இந்தப் பிரிவினைச் சிதைக்க அக்கொடியோர் மனமிசைந்தனரோ என்பது எனக்குப் புரியவில்லை.

புதிய ஏடுகளும், பருவ வெளியீடுகளும் வைக்கப்பட்டிருந்த பகுதியில் அதிக சேதமில்லை. எனினும் அங்கிருந்த ஏடுகள் அனைத்தும் ஒரு மூலையில் குவித்து தீ மூட்டப்பட்டிருந்தன. இரண்டாவது மாடியில் உள்ள கலாபவனத்தில் உபயோகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்த நூல்களைக் கூட அவர்களிட்ட தீ விட்டு வைக்கவில்லை. எஞ்சியதெல்லாம் நூலகரின் அலுவலகத்தில் ஒதுக்கப்பட்டுக் கிடந்த சேதமுற்ற சிறு நூற்தொகுதி ஒன்று மட்டுமேயாகும்.

அந்தப் பயங்கர இரவில் நூலகத்தினுள் புகுந்தோரின் நோக்கம் எல்லாம் நூல்களை ஒழித்துக்கட்டுதல் ஒன்றுதானென்பது தெட்டத் தெளிவாகியிருந்தது.

யாழ் நூலகத்தில் தான் மேற்கொண்ட இந்த துன்பகரமான மதிப்பீட்டின் முடிவான தீர்ப்பு யாழ்ப்பாணப் பொதுநூலகம் இன்று ஒரு பழம் கதையும் கனவுமாகி விட்டது.

ஆனால் அறிவாலயங்களினதும், அறிவாற்றல் படைத்த மக்களினதும் வரலாறு என்றுமே இவ்வாறு முடிந்ததில்லை. மதியீனர் செயலால் மறைந்த இந்த அறிவாலயம் மீண்டும் உயிர்த்தெழும் என்பது உறுதி.

யாழ். பொது நூலகத்தில் எரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்களின் சாம்பலிலிருந்து அறிவுலகம் பெருமைப்படக்கூடிய புதிய நூலகமொன்று உதயமாகி அறிவுக்கதிர் பரப்பும் நாள் வெகு தூரத்திலில்லை என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

இவ்வாறு அவர் தன் கட்டுரையை முடிக்கின்றார். அவரின் அசையாத நம்பிக்கை வீண்போகவில்லை. இன்று யாழ். நூலகம் பொலிவுடன் பூத்துக் குலுங்குகின்றது.

### எரித்தவர்கள் யார்?

"யாழ்ப்பாண நூல் நிலையத்தை தீயிட்டவர் காமினியே" ஜனாதிபதி பதில் என்று தலையங்கமிட்டு 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி ஈழநாடு பத்திரிகையில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது.



யாழ்ப்பாண நூல்நிலயத்தை தீயிட்டவர் காமினியே

- ஜனாதிபதி பதில்

"வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைமையை எழுப்பியவர்கள் யார்? இதற்குப் பிரதான காரணம் காமினியே, பத்து வருடங்களுக்கு முன் 1981 இல் நடந்த சம்பவங்கள் இந்நாட்டின் சமுதாயங்களுக்கிடையேயான உறவுகளில் ஒரு கறைபடிந்த துயரமான சம்பவங்களாகும். பாராளுமன்றத்தில் மாவட்ட அபிவிருத்தியைக் கொண்டு வந்து நாம் அதிகாரத்தைப் பரவலாக்க முயன்ற பொழுது காமினி திஸாநாயக்கா அதனை எதிர்த்தார்.

தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடைபெறுவதற்கு முதல்நாள் காமினி நிறைய ஆட்களைக் கூட்டிக் கொண்டு யாழப்பாணம் சென்றார். யாழ்ப்பாணம் சென்ற அவர் அங்கு நிறைய வாக்குப் பெட்டிகளைச் சேகரித்து கள்ளவாக்குகளைப் போட்டார்.

இதனை நான் கூறவில்லை. பாராளுமன்றத்தில் காமினி திஸாநாயக்கா பிரசன்னமாக இருந்த போது கூட்டணியின் செயலதிபர் ஆற்றிய உரை என்னிடம் உள்ளது.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களில் சதி நாச வேலைகளைச் செய்த பின்னர் ஒரு சர்வதேச நூல் நிலையமான யாழ்.பொது நூலகம் எரியூட்டப்பட்டது. வாக்குச் சீட்டுக்களால் நீதியைக் பெறுவதற்கு எமது தலைவர்களால் முடியாவிடில் நாங்கள் நீதியைக் குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ்த் தீவிரவாதிகள் நினைத்தனர். இப்படித்தான் அவர்கள் தீவிரவாதச் செயல்களில் இறங்கினார்கள். காமினி திஸாநாயக்கா யாழ்ப்பாணத்தில் தேர்தல்களில் தலையீடு செய்தார் என்பது இரகசியமல்ல. 300 பேர் தேர்தல் கடமைகளைச் செய்யவென அவரால் அழைத்துச் செல்லப்பட்டனர். பல வாக்குச்சீட்டுப் பெட்டிகள் காணாமல் போயின. இவ்வாறு அன்றைய ஜனாதிபதி காலஞ்சென்ற ஆர். பிரேமதாஸ கூறியதாக (1991ஆம் ஆண்டு) பத்திரிகைகளில் செய்தி வந்தது.

### சில பத்திரிகைச் செய்திகள்

13-06-1981

◆ யாழ். நூல்நிலையத்துக்கு சர்வதேச நிதி உதவிக் கோரிக்கை- யாழ். மாநகரசபை துணை முதல்வர் பிரேரணை சமர்ப்பிப்பு

13.06.1981

◆யாழ். நூலக எஞ்சிய நூல்கள் சேகரிப்பு

யாழ்ப்பாண பொது நூல் நிலையத்தில் எஞ்சிக் கிடந்த சொற்பமான நூல்கள் யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்தால் சேகரிக்கப்பட்டு நகர மண்டபத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. பொதுசன நூல்நிலையம் மூடப்பட்டுக்கிடக்கின்றது. பொதுசன நூல் நிலையக் கட்டடத்தின் பெரும்பகுதி திருத்தி அமைக்கப்பட வேண்டியிருப்பதால் இதற்கு ரூபாய் 15 லட்சம் செலவு ஏற்படும் என மதிப்பிடப் பட்டுள்ளது. பதைரப்பட்ட நிலவரங்கள் அறிந்து யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் சகல நிலையியற் குழுக்களும் ஆராய்ந்தன. யாழ். நூலகத்தில் இருந்து நூல்களை இரவலாக பெற்றவர்கள் தற்காலிகமாக அந்நூல்களை வைத்திருக்குமாறும் நூலகப் பொறுப்பாளர் அறிவித்தல் விடுக்கும்பொழுது அந்நூல்களை கொண்டு வந்து தருமாறும் ஒருவர் தெரிவித்தார்.

16-06-1981

◆ பொலிஸ் விசாரணைக்குழு முன் யாழ். நூலக பொறுப்பதிகாரி 3 மணி சாட்சியம்.

◆ யாழ்.பொது நூலகத்தை எரித்தது காட்டுமிராண்டிச் செயல்- வாசுதேவ நாணயக்கார. கூட்டணி எம்.பி.களின் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு.

◆ யாழ்.வன்செயல்கள் - பொலிஸ் விசாரணைக்குழு முன் 15க்கு மேற் பட்டோர் சாட்சியம் மாநகர சபைக்கு ஏற்பட்ட சேதம் 20 இலட்சம்.

17-06-1981

◆யாழ். கொலை,கொள்ளை, தீவைப்பு சம்பவங்களுக்கு மாநகர சபை பலத்த கண்டனம் உறுப்பினர்கள் ஆவேசமான உரை.

◆யாழ். நூல் நிலையம் இன்று முதல் இயங்கும் - நூல் நிலையத்தில் சைக்கிள்கள் நிறுத்தப்படும் கொட்டகையை நூல் நிலையுமாக் பாவிப்பது என்று நேற்று மாநகர சபை விசேட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

19.06.1981

◆ யாழ். நூல் நிலையத்துக் குரிய நூல்களை மீளப்பெறல்- யாழ் பொதுசன நூல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட சகலவித நூல்களையும் உடனடியாக நூல் நிலையத்திற்கு திருப்பி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். காலை 9 தொடக்கம் மாலை 5 மணி வரை நூலக காரியாலயத்தில் ஒப்படைத்து பற்றுச் சீட்டை பெற்றுக் கொள்ளலாம். இது தவிர நூலகத்துக்கு சொந்தமான புத்தகங்களை வைத்திருப்பவர்களும் அவற்றை நூலக அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சீ.வீ.கே. சிவஞானம், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம், மாநகர அலுவலகம் யாழ்ப்பாணம்.18.06.1981

20.06.1981

◆ யாழ். பொது நூல் நிலையம் எரிக்கப்பட்டதற்கு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணையை மீறினால் அரசு கவிழ்வதை தடுக்கமுடியாது

## எச்சரிக்கிறார் விமல்

(கொழும்பு)

மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து - அந்த ஆணையை மீறாமல் ராஜபக்ஷ அரசு செயற்பட வேண்டும். இதுதான் இந்த அரசை நிறுவிய மக்களின் விருப்பம். எனவே மக்கள் ஆணையை மீறிச் செயற்பட்டால் இந்த அரசு கவிழ்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மக்களின் ஆணையை மீற வேண்டாம் எனவும், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் அரசிடம் நாம் கோரிக்கை விடுக்கின்ற போது அரசுக்குள் இருக்கும் ஒரு சிலர் எம்மைக் குழப்பவாதிகள் என்று சாடுகின்றனர்.

நாம் ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகச் செயற்படவில்லை. அன்று தொடக்கம் இன்றுவரை ராஜபக்ஷ குடும்பத்தையும் அரசையும் பாதுகாத்தே வருகின்றோம். இந்த அரசை நிறுவியதில் எமக்குப் பெரும் பங்கு உண்டு. மக்களின் ஆணைக்கு மாறாக, நாட்டைத் தாரைவார்க்கும் வகையில் தீர்மானங்களை அரசு எடுத்தால் அதை நாம் பகிரங்கமாகவே எதிர்ப்போம் என விமல் வீரவன்ச தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன்-எதற்கு - எப்படி

### வாழ்வை நெறிப்படுத்தும் இந்து சமயம்

(தொடர்ச்சி)

இப்படி நமது வாழ்வியலின் ஒவ்வொரு செயலிலும் இந்து சமய கோட்பாடுகள் இரண்டரக் கலந்துள்ளது. அந்தக் கோட்பாடுகளை சரியாக கடைப்பிடிப்பவர்களே பிறவிச் சூழலில் இருந்து விடுபட முடியும்.

இந்து தர்மத்தால் மட்டுமே பிறப்பு-இறப்பு சூழலில் இருந்து நம்மை விடுவிக்க முடியும். அதற்கு ஒவ்வொருவரும் சில கடைமைகளை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

• தினமும் சூரியன் உதிப்பதற்கு முன்பு படுக்கையில் இருந்த எழ வேண்டும்.

• காலையில் நீராடி தூய ஆடை அணிந்ததும் தவறாமல் இறை வழிபாடு செய்ய வேண்டும்.

• காலை, மாலை இரு நேரமும் நெய் விளக்கேற்றி நைவேத்தியம் படைத்து வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

• நேரம் இருப்பவர்கள் உரிய மந்திரம் சொல்லி வழிபடுங்கள்.

• நெற்றியில் திருநீறு, குங்குமம் அணியாமல் இருக்கக் கூடாது.

• தினமும் புராணம் இதிகாச தேவார -திவ்ய பிரபந்தம் உள்ளிட்ட சமய நூல்களைப் படிக்க வேண்டும்.

• வீட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தினமும் தியானம் பழக வேண்டும்.

• ஆலயங்களில் நடத்தப்படும் பஜனை சத்சங்கம் கதாகாலட்சேபம் சமய சொற்பொழிவுகளை சென்று கேட்க வேண்டும்.

• வீட்டில் நம் கண்ணுக்கு அடிக்கடிபடும் இடத்தில் ஓம் படத்தை மாட்டி வைக்கவும்.

• விரத நாட்கள், பண்டிகை தினங்களை பொழுதுபோக்கு நாட்களாக கருதாமல் ஐதீகத்தை உணர்ந்து ஆத்மார்த்தமாகக் கடைப் பிடிக்கவேண்டும்.

• மாதத்துக்கு ஒரு தடைவையாவது வீட்டில் நாம சங்கீர்த்தனம் செய்வது அல்லது சிறப்பு வழிபாடுகள் நடத்தலாம்.

• மடாதிபதிகள் துறவிகள் ஞானிகளை சந்தித்து ஆசி பெற வேண்டும். துறவிகள் பார்வை நம் மீது பட்டால் தோஷங்கள் விலகும்.

• தினமும் ஆலயம் செல்ல வேண்டும். முடியாதவர்கள் வாரத்திற்கு ஒரு தடவையாவது ஆலயத்துக்கு சென்று நிதானமாக மனதை ஒரு முகப்படுத்தி இறைவழிபாடு செய்ய வேண்டும். ஆலயத்துக்கு செல்லும் போது குடும்பத்தோடு செல்ல வேண்டும்.

குழந்தைகளுக்கு ஆலயங்களில் உள்ள சிறப்புகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

தினமும் ஆலயத்துக்குச் சென்றால் நாளடைவில் வழிபாட்டு ரகசியங்கள் உங்களுக்கு புரிந்து விடும். ஆலய வழிபாட்டில் உள்ள கேள்விகளுக்கு விடை கிடைக்கத் தொடங்கி விடும்.

அந்த விடைகள் உங்களை முழு மனிதனாக்கும். மனிதருள் மாணிக்கமாக நீங்கள் ஒளி வீசுவீர்கள். அந்த நிலையை பயன்படுத்தி பிறவிப் பெருங்கடலில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

அந்த இலக்கை வெல்ல ஆலய வழிபாட்டுத் தொகுப்பு உங்களுக்கு படிக்கல்லாக அமைந்திருக்கும் என்று நம்புகிறோம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## ரயில் மோதி மூவர் பலி

(கொழும்பு)

ரயில்களில் மோதி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மூன்று இடங்களில் ரயில் மோதி மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

## சட்டவிரோத துப்பாக்கிகளுடன் நால்வர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஹொரவ்பதான, கலாவன, மீரிகம, தின்னியாவல மற்றும் கலஹ போன்ற பிரதேசங்களில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

## போதைப் பொருள் குற்றச்சாட்டு 20 பேர் விளக்கமறியலில்

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 20 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களுள் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 16 அதிகாரிகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபர்களை மே மாதம் 3 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 260 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 200 |
| தக்காளி | 170 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 90 | 120 | 120 |
| கரட் | 250 | 160-200 | 240 |
| பூசணி | 160 | 70 | 80 |
| புடோல் | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 280 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 240 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 160 |
| பயற்றங்காய் | 160 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 90 | 120 |
| கறிமிளகாய் | 160 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 450 | 600 |
| போஞ்சி | 170 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 130 | 260 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 30 | 50 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 180 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 120 | 240 |
| முள்ளங்கி | 70 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடப்படாத திண்மக் கழிவகற்றலை திட்டமிட்டு செயற்படுத்தவும்

(முறிகண்டி)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கொக்காவிலை அண்மித்த பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் திட்டமிடப்படாத வகையில் திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.**



ஏ-9 வீதியின் 236 ஆவது மைல்கல்லிற்கும் 237 ஆவது மைல்கல் அமைந்துள்ள பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியின் மேற்கு பக்கமாக சுமார் 500 மீற்றர் தொலைவில் இவ்வாறு திண்மக்கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

மிக மோசமான வகையில் எந்தவொரு திண்மக் கழிவகற்றல் முறையையும் பின்பற்றாது, சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் கவலையின்றி இவ்வாறு திண்மக்கழிவுகள் கொட்டப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் குறித்த அதிகாரியுடன் தொடர்புகொண்டபோது, குறித்த இடம் தமக்கு ஒதுக்கப்பட்டதாகவும் அப்பகுதியில் சுற்றாடல் பாதுகாப்பு முறைகளை பின்பற்றியதாகவும் அவ்விடத்தை தான் சென்று பார்வையிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அப்பகுதியில் உக்காத பொருட்கள், கண்ணாடி போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் உள்ளிட்டவை பாதுகாப்பின்றி கொட்டப்பட்டுள்ளன என்பது மிக முக்கியமான விடயமாகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தையும் இணைக்கும் தொடர் காட்டுப்பகுதியான குறித்த காட்டுப்பகுதியில் அதிகளவான காட்டு விலங்குகள் நடமாடும் பகுதிகளாக அவ்விடம் காணப்படுகின்றது.

காட்டு விலங்குகளிற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய கண்ணாடி போத்தல்கள், பிளாஸ்ரிக்குகள், கழிவு பொருட்கள் என்பனவற்றால் பாதிப்புக்கள் ஏற்படுத்துமிடத்து அவை மக்கள் குடியிருப்புக்கள் நோக்கி நகரவோ அல்லது இறக்கவோ அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. (5-4-100)

## வருடாந்த மஹோற்சவம்

(இருபாலை)

திருநெல்வேலி திருவருள் ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா சமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் சிவானந்த தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5-4-136)

## வெள்ளோட்டம்

(இருபாலை)

கல்வியங்காடு ஸ்ரீ பத்திர காளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தான புது மஞ்ச வெள்ளோட்டம் நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம் பெறவுள்ளது.

மாலை 7 மணிக்கு சுவாமி மஞ்சத்தில் எழுந்தருளுவார் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (5-4-136)


# மணல் கடத்தல் இருவர் கைது

(சாவகச்சேரி)


சாவகச்சேரி மந்துவில் பகுதியில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி பொலிஸார் கனகம் புளியடிச் சந்திப் பகுதியில் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த போது அவ்வழியே சட்ட விரோத முறையில் மணல் கொண்டு சென்ற டிப்பர் வாகனத்தை பின் தொடர்ந்துள்ளனர். குறித்த டிப்பர் வாகன சாரதி மந்துவில் பகுதியில் டிப்பர் வாகனத்தில் இருந்த மணலை பறித்து விட்டு, டிப்பரையும் கைவிட்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

பொலிஸார் டிப்பர் வாகனத்தை எடுத்துச் செல்ல முற்பட்ட போது பெண் ஒருவர் உட்பட இருவர் இடையூறு விளைவித்தனர். அதன் காரணமாக பொலிஸார் இருவரையும் கைது செய்ததுடன் டிப்பர் வாகனம், மணல் ஆகியவற்றையும் கைப்பற்றினர். (5-4-30)



புத்தாண்டை முன்னிட்டு வவுனியா பட்டக்காடு ஸ்ரீராம் அறநெறிப் பாடசாலை மற்றும் கிராமத்து இளைஞர்களின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான எஸ்.காண்டீபன், ஏ.எம்.லரீப், ஏ.அப்துல் பாரி, சிறுவர் நன்னடத்தை மேம்பாட்டு அதிகாரி ஜெ.ஜெயக்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:- சதீஸ்)



நீர்ப்பாசன செழுமை வேலைத்திட்டத்தின் கிராமிய குளங்கள், அணைக்கட்டுக்களை அபிவிருத்தி செய்தலின் கீழ் பினாக்காய் குளத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டம் நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் கலந்து கொண்டார். மேலும் பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடமாகாண விவசாயப் பணிப்பாளர், விவசாயத்துறை சார் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: சிவசாந்தன்)




சித்தங்கேணி கலைவாணி சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மேற்படி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் கடந்த சனிக்கிழமை சனசமூக நிலைய மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம்- செ.ரவிசாந்)



கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்தும் வாழ்க்கைக்கான தோட்டம் எனும் தேசிய வேலைத்திட்டம் கடந்த சனிக்கிழமை தென்மராட்சி பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்; சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா!

– கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சீனாவால் 'சி'வுக்குள் குழப்பம் 'த' வுக்குச் செய்த பழி போலும்

*பெரியவர் ஒருவர் நேற்றைய தினம் வலம்புரி அலுவலகத்துக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்திருந்தார்.*

**பெரியவர்:** தம்பி. நான் ஒரு வாசகன் கதைக்கிறன். சீனாவால 'சி'வுக்குள்ள குழப்பமோ!

**ஆசிரியர்பீடம்:** ஐயா! நீங்கள் சொல்வது விளங்கவில்லை.

**பெரிய:** தம்பி சீனாவுக்கு துறைமுக நகரத்தைக் கொடுக்கிற விடயம் 'சி'வுக்குள்ள பெரும் குழப்பத்தை ஏற்படுத்திப் போட்டுது. இலங்கைக்குள்ள சீனாவுக்கு ஒரு தனி நாடு வழங்கப்படுவதாகத் தென்பகுதி முழுக்கக் கதை. இதால ஜனாதிபதிக்கு ஒரே தலையிடி. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏலவே உடல் நிலை சரியில்லை. இந்தக் கட்டத்தில துறைமுக நகர விவகாரம் கொழுந்துவிட்டு எரிகிறது.

**ஆசிரி:** என்ன ஐயா! சொல்லுறியள். கொழுந்து விட்டு எரியுதோ!

**பெரிய:** ஓ! துறைமுக நகரத்தைக் கடலுக்குள்ள கட்டினதே தென்பகுதியார் தீ வைத்தாலும் அது பற்றி எரியக் கூடாது எண்டுதானே! ஆகையால துறைமுக நகரம் எரியாது. துறைமுக நகரத்தால தென்பகுதி அனல் கக்குது.

**ஆசிரி:** என்ன ஐயா! சொல்லுறியள்.

**பெரிய:** என்ன நீங்கள் ஒண்டும் அறியல்லப்போல. துறைமுக நகரம் பற்றிய அறிக்கையை தங்களுக்குத் தரவேணும் எண்டு பௌத்த பீடங்கள் அவசரமாகக் கேட்டிருக்கினம்.

**ஆசிரி:** அப்ப நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால், துறைமுக நகரத்தை விட்டிட்டு சீனா வெளியேறும்போல.

**பெரிய:** தம்பி இதென்ன கதை. சீனாக் காரன் இங்க வந்து கடலைத் தோண்டி கடலை மேடாக்கினது விட்டுட்டுப் போறதுக்கெண்டோ நினைக்கிறியள். அல்லது சீனாக்காரன் எங்காவது போய் அந்த இடத்தை விட்டிட்டு வந்ததாக வரலாறு இருக்குதோ. துறைமுக நகரத்தைச் சுற்றி சீனப் பாதுகாப்புப் படைகள் காவல் காத்துக் கொண்டு நிற்குது எண்டால், இனி துறைமுக நகரம் தனி நாடுதானே.

**ஆசிரி:** அப்ப ஐயா சீனாவோட பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தலைவிதி 'சி'வுக்கு வந்துவிட்டுதோ

**பெரிய:** பின்ன. பீரங்கிகள், போர்க் கப்பல்கள், யுத்த விமானங்கள் இதுகள தயவுசெய்து துறைமுக நகரத்துக்குக் கொண்டு வந்து விடாதீங்க எண்டொரு பேச்சுவார்த்தை நடத்த வேணும் தானே!

**ஆசிரி:** அப்ப ஐயா! வடக்கு – கிழக்கில ஏனாம் இராணுவம் குவிக்கப்பட்டிருக் கிறது.

**பெரிய:** விடுதலைப் புலிகளுடன் போர் நடந்த போது படையினருக்கு சீனா உதவி செய்ததல்லோ! அந்த உதவிக்கு பரிசாக தனக்கொரு தனிநாட்டை இலங்கைக்குள்ள சீனா உருவாக்கிப் போட்டுது.

**ஆசிரி:** அப்ப இனி துறைமுக நகரத்துக்குப் போக இலங்கையருக்குக் கடவுச்சீட்டுத் தேவை எண்டு சொல்லுறியள்.

**பெரிய:** அட தம்பி 'த'வுக்குச் செய்த பாவ பழி எங்கே போய் முடியப் போகுது எண்டு பார். அதின்ர முதல் கட்டம்தான் இது. இனி ஆட்சிக் கவிழ்ப்பு சீனப் படை குவிப்பு எண்டெல்லாம் 'சி' படப்போற பாட்டை இருந்து பார்.

**ஆசிரி:** ஐயா நீங்கள் சொன்னது ஒண்டும் எங்களுக்கு விளங்கல்ல.

### வவுனியா சாந்தசோலைப் பகுதியில்

## மரக்கடத்தல் வாகன சாரதியை தேடி படையினர் சல்லடை

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனம் ஒன்று இராணுவத்தினரை மோதி இராணுவ வீரர்கள் காயமடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் வாகனத்தின் சாரதி வவுனியா சாந்தசோலை பகுதியில் தங்கியிருப்பதாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் நேற்று பிற்பகல் 3 மணி முதல் சாந்தசோலையில் சில பகுதிகளை முடக்கி குறித்த வாகனத்தின் சாரதியை தேடி சல்லடை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு மரக்கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் படையினரின் சோதனைச்சாவடியில் வாகனத்தை நிறுத்த முற்றப்பட்ட போது அவ்வாகனம் மோதியதில் கடமையிலிருந்த படையினர் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் குறித்த சாரதி சாந்தசோலையில் மறைந்திருப்பதாக தெரிவித்து சாந்தசோலை கிராமத்தில் முதலாம் குறுக்குத் தெரு, இரண்டாம் குறுக்குத் தெரு, கிரேஷர் வீதி என்பனவற்றை முடக்கிய படையினர் அங்கிருந்து மக்கள் வெளியே வருவதையும் உட் செல்வதையும் சில நிமிடங்கள் தடை செய்திருந்தனர் .

மாலை வரையும் இடம்பெற்ற இத் தேடுதல் நடவடிக்கையில் சாரதி கைது செய்யப்படாததால் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர். (ம-3,299)

## நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது

### பாதுகாப்பு செயலாளர் பெருமிதம்

(கொழும்பு)

"சுபீட்சத்தின் நோக்கு" எனும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக இலங்கையின் தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பாதுகாப்பு அமைச்சின் செயற்பாடுகளை சம்பிரதாயபூர்வமாக மீள ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர்,

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் அதே சமயம் திறமையாக செயல்படுவதற்கும் அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டில் எமது அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதற்கும் அனைவரும் உறுதி பூண வேண்டும்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய, அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பு மற்றும் முப்படையினரின் சுறுசுறுப்பான செயற்பாடுகள் என்பன காரணமாக நாட்டில் கோவிட் - 19 வைரஸ் பரவலை கட்டுக்குள் வைத்திருக்க முடிந்தது. இதற்காக செயலாற்றிய அனைவருக்கும் நன்றிகள் என்றார். (ம-3)

### யாழ்.பல்கலைக்கழகத்தின்

## வவுனியா வளாகத்தில் 22 பேருக்கு பி.சி.ஆர்

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் பணிபுரியும் பராமரிப்பு பிரிவு ஊழியர்கள் 22 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தில் பணிபுரியும் மதவாச்சியை சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த ஊழியர் பணி புரியும் பராமரிப்பு பிரிவை சேர்ந்த 22 ஊழியர்களிற்கு பி.சி. ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்று உறுதி செய்யப்பட்ட குறித்த ஊழியர் கடந்த 9 ஆம் திகதிக்கு பின்னர் பணிக்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,299)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### செய்ய முடியும் என்று நம்பு

❖ கடவுளைக் காண மனிதனுக்குத் தொண்டு செய்யுங்கள். பட்டினியால் வாடும் ஏழைகளை நாராயணர்களாக பாருங்கள்.

❖ உங்களை உடல் அளவிலோ, அறிவு அளவிலோ, ஆன்மிக அளவிலோ ஏதாவது ஒரு விடயம் பலவீனமாக்கினால், அதை விஷமாகக் கருதி உதறித் தள்ளுங்கள்.

❖ இறைவன் ஒரு சக்தி மட்டுமல்ல, அவரே உண்மையும் கூட. இதை உணர்ந்து உண்மையுடன் நடந்து கொள்ளுங்கள்.

❖ திறக்க முடியாத அனைத்து வாசல்களையும் அன்பு திறக்கிறது. உலகின் அனைத்து இரகசியங்களுக்கும் வாசல் அன்பு தான்.

❖ கால்பந்து விளையாடி விட்டு, கீதை படித்தால் மனதில் நன்றாகப் பதியும். இரத்தத்தில் வேகமிருந்தால் தான், பகவான் கிருஷ்ணரின் அறிவையும், ஆற்றலையும் அறிய முடியும்.

❖ நம்மிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப் போல, அதை விலக்கும் சக்தியும் உள்ளது.

❖ முடியாது என்ற வார்த்தையை அகராதியை விட்டே உதறித்தள்ளுங்கள். உங்களால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2021-14.05.2021

## நல்ல மாற்றம் இல்லம் தேடி வரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



### மிதுன இராசி வாசகர்களே!

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், விரயாதிபதி சுக்கிரனோடும், சகாய ஸ்தானாதிபதிசூரியனோடும் இணைந்து லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டேயிருக்கும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும், குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால் நல்ல மாற்றம் இல்லம் தேடி வரலாம்.

### கூட்டுக்கிரக யோகம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் இணைந்து சஞ்சரிக்கின்றன. இதனால் 'புத சுக்கிர யோகம்', 'புத ஆதித்ய யோகம்' போன்ற யோகங்கள் செயற்படுகின்றன. இந்த யோகங்களால், விலை உயர்ந்த பொருட்களின் சேர்க்கை ஏற்படலாம். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். பொது நலனில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வரலாம். வளர்ச்சியில் இடையிடையே தளர்ச்சி ஏற்பட்டாலும், அதை ஒரு வழியாக சமாளித்து விடுவீர்கள்.

### செவ்வாய் -சனி பார்வை

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய், மகரத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியைப் பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல. பூர்வீக சொத்துக்களில் சில பிரச்சினைகள் ஏற்டலாம். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பிறருக்கு நன்மை செய்தாலும், தீமையாகவே முடியும். அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கைகொடுக்கும்.

### ரிஷப - புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 28 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிநாதனாகவும் சுகஸ்தானாதிபதியாகவும் விளங்கும் புதன், விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், கடுமையான விரயம் ஏற்படும். குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால், காரியங்கள் எப்படியாவது கடைசி நேரத்தில் கைகூடிவிடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.




### ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்

மே 8 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், 12 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் விரய ஸ்தானம் பலப்படுகின்றது. எனவே சுப விரயங்கள் அதிகரிக்கும். துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள். இடமாற்றம், வீடு மாற்றம் எதிர்பார்த்தபடியே அமையும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாவதில் இருந்த பிரச்சினை குறையும்.

### சனியின் வக்கிரகாலம்

மே 12 ஆம் திகதி முதல், மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அஷ்டமாதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான். என்றாலும் 9 இற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் தந்தை வழி விரோதங்களை சந்திக்க நேரிடும். பூர்வீக சொத்துப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். புதிய முயற்சிகளில் தடை ஏற்படும். எதிர்பாராத சில விரயங்களால் மனநிம்மதி குறையலாம்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும், வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபாடு செய்யுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் செவ்வாய் -சனி பார்வையால் விரயங்கள் அதிகரிக்கலாம். வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் உருவாகும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். உடன்பிறப்புகளின் குணமறிந்து செயற்படுவது நல்லது. தாய்வழி ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளுக்குரிய கடமைகளைச் செய்ய முன்வருவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு.

## உடல் நலத்தில் அதிக கவனம் தேவை!



### கடக இராசி வாசகர்களே!

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சந்திரன், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். யோககாரகன் செவ்வாய், விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அஷ்டமத்தில் குரு பகவான் இருக்கிறார். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருக்கின்றது. எனவே இம்மாதம் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்து செயற்படுங்கள். குடும்பச்சுமை கூடும்.

### கூட்டுக்கிரக யோகம்

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில், உங்கள் இராசிநாதன் சந்திரன், தனாதிபதி சூரியன், சகாய- விரய ஸ்தானாதிபதி புதன், சுக - லாபாதிபதி சுக்கிரன் ஆகிய கிரகங்கள் இணைந்து கூட்டுக் கிரக யோகத்தை உருவாக்குகின்றன. 'புத- ஆதித்ய யோகம்', 'புத- சுக்கிர யோகம்' போன்ற யோகங்களும் செயற்படுகின்றன. எனவே, கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். சுபச்செலவு அதிகரிக்கும். அதேநேரம் அஷ்டமத்தில் குரு இருப்பதாலும், கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதாலும், எதையும் திருப்தியாக செய்ய இயலாது. புதிய ஒப்பந்தங்கள் கைநழுவிச் செல்லலாம்.

### செவ்வாய் - சனி பார்வை

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கின்றார். அது அவ்வளவு நல்லதல்ல. வீண் வம்புகள் வீடு தேடி வரலாம். ஆரோக்கியத் தொல்லை, வாகன தொல்லை ஏற்படலாம். கடன்சுமையின் காரணமாக, வாங்கிப் போட்ட இடத்தை விற்க நேரிடலாம்.

### ரிஷப - புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 28 ஆம் திகதி, ரிஷப இராசிக்குப் புதன் செல்கின்றார். இதன் விளைவாக விரயங்கள் அதிகரிக்கும். இருப்பினும் விரயத்திற்கேற்ற தன வரவு வந்து சேரும். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர் புதன் [illegible] புகளின் இல்லத்தில் ஒரு நல்ல காரியம் நடைபெறும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம்.




### ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்

மே 8 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு லாப ஸ்தானாதிபதியான சுக்கிரன், லாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது, பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய பாதை புலப்படும். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். புதிய வாகனம் வாங்க ஆர்வம் காட்டுவீர்கள்.

உத்தியோகஸ்தர்களு க்கு ஊதிய உயர்வு கிடைக்கலாம். சவாலான சில காரியங்களை முடித்து பாராட்டு பெறுவீர்கள்.

### சனியின் வக்கிர காலம்

மே 12 ஆம் திகதி முதல், மகரத்தில் சஞ்சரிக்கும் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி, வக்கிரம் பெறுவதால் குடும்பப் பிரச்சினை அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. கொடுக்கல் -வாங்கல்களில் சிக்கல் ஏற்படும். வீண் விவகாரங்களில் தலையிட வேண்டாம். குறிப்பாக பொறுமையையும், நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய நேரம் இது. இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு உருவாகலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். கண்டகச் சனியின் ஆதிக்கம் நடப்பதால், உடல்நலத்தில் அதிக கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்...

பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் ஆய்வுகூடத்தில் 350 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 7 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள். ஏனைய நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது." என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## யாழில்...

சேர்ந்த 77 வயதுடைய முதியவர் ஒருவரே நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்துள்ளார்.

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கோவிட்-19 நோய்த்தொற்று கீரணமாக உயிரிழந்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நல்லூர் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த 59 வயதுடைய் ஒருவரே நேற்று திங்கட்கிழமை காலை உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

நிமோனியாவினால் பாதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார். (ம-3,18,33)

## காட்டு யானை...

குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் சின்னசிப்பிகுளம் பகுதியை சேர்ந்த நலீம் (வயது-43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## குடும்பஸ்தர்...

அம்பன் கிழக்கை சேர்ந்த 55 வயதுடைய கிட்டிணன் வரதராஜா என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம-3,60)

## யாழ்.பல்கலை...

மாணவர்கள் அஞ்சலிகளை செலுத்தியிருந்தனர். (ம-3,18,33)

## அரசு பிளவடைய...

தீருவேன்" என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி கூட்டணி, ஒரு குடும்பமாக இயங்குகின்றது.

குடும்பம் என்றால் அதற்குள் சில கருத்து வேறுபாடுகள் வரத்தான் செய்யும். எமது கூட்டணி அரசை எவராலும் பிளவுபடுத்த முடியாது" என தெரிவித்துள்ளார். (ம-3)

## கத்திக்குத்துக்கு...

உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 16 ஆம் திகதி குடும்பத் தகராறு காரணமாக கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,281)

## ஆம்பலுடன்...

யுடைய திமிங்கிலத்தின் ஆம்பலுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர் என்று வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அநுராதபுரம், புத்தளம் பிரதேசங்களைச் சேர்ந்த நால்வரும் அவர்கள் பயணித்த வாகனங்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன .

ஆம்பல் எனப்படுவது திமிங்கிலத்தின் வாந்தியாகும். அது பல கோடி பெறுமதியானது என தெரிவிக்கப்படுகின்றது. ஆம்பல் ஒரு கிலோகிராம் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியானதென குறிப்பிடப்படுகின்றது.

இந்த திமிங்கிலத்தின் வாந்தியை வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதாக குறிப்பிடப்படுகின்றது. (ம-3,281)

## ரூ.5 இலட்சத்து...

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சி திக்கம் பகுதியைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைக்கப் பெற்றதாகவும் அதில் உங்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் பணப் பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனைப் பெற 55,000 ரூபாய் பணம் ஈஸி கேஷ் மூலம் வழங்குமாறும் கூறப்பட்டுள்ளது.

இதனை நம்பிய அவர்கள் தம்மிடம் இருந்த நகையினை அடகு வைத்து நெல்லியடியில் உள்ள ஈசி கேஸ் பரிமாற்ற முகவர் ஒருவர் ஊடாக 5 ஆயிரம் ரூபாய் வீதமாக இரண்டு தரம் அனுப்பியுள்ளனர்.

உடனடியாகவே அந்த பணத்தை பெற்றுக் கொண்ட அவர்கள் மீதிப் பணத்தையும் அனுப்புமாறு கூறப்பட்டதை அடுத்து மிகுதிப் பணத்தை அனுப்ப முற்பட்டபோது ஈசி கேஸ் முகவர் ஒரே இலக்கத்துக்கு பணம் அனுப்புவதால் சந்தேகம் கொண்டு விசாரித்தபோது அவர்கள் பணப்பரிசு தொடர்பான விடயத்தை தெரிவித்தனர்.

இதன் பின்னரே இவர்கள் ஏமாற்றப்பட்டமை தொடர்பில் தெரியவந்துள்ளது. (ம-3,60)

## மகிந்த தலைமை...

பல்வேறு சிறிய கட்சிகளையும் சேர்ந்த பல பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்துக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பசில் ராஜபக்ஷ கூட்டி வந்தமையால், பிரதான கூட்டத்தில் பங்குபற்றாமல் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ (தேசிய சுதந்திர முன்னணி), உதய கம்மன்பில (புதிய ஹெல உறு மய), வாசுதேவ நாணயக்கார (ஜனநாயக இடதுசாரி முன்னணி) போன்றோர் வெளியேறியமையால் கூட்டம் பிசுபிசுத்துப் போனது .

நேரத்துடன் பிரதமரின் அலுவலக இல்லத்துக்கு சென்ற விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோர் பிரதமர் மகிந்த ராபக்ஷவைச் சந்தித்துத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துவிட்டு வெளியேறினர்.

எனினும், அவர்களுடன் வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேன மற்றும் சிலர் இருந்து பிரதமருடன் பேசி விட்டுச் சென்றனர்.

ஆயினும், மொட்டுக்கட்சிக் கூட்டணியின் உள்வீட்டுக் குழப்பத்தைத் தீர்க்க நேற்று எடுக்கப்பட்ட கூட்டு முயற்சி பஸில் தலைமையில் பல சிறு கட்சிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய காரணத்தால் பிசுபிசுத்துப் போனது எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

## ஜனநாயக...

பாராளுமன்ற விவாதம் இன்றி பின்வாசல் வழியாக பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கிறது.

அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள நீதிமன்றத்தின் அதிகாரங்களை மீறி ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடுகளேயே தற்போது முன்னெடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் பல விடயங்களை பாராளுமன்ற விவாதம் இன்றி பின்வாசல் வழியாக பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கிறது.

அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள நீதிமன்றத்தின் அதிகாரத்தை இரத்து செய்து ஜனநாயகத்திற்கு விரோதமாக செயற்பட முயற்சிக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம்பெற்றதில்லை.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் சபாநாயகருக்கு அறிவிக்காமல் எந்தவொரு விடயத்தையும் பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் உள்ளடக்க முடியாது என்றார். (ம-3)


தன நிதானய
திகதி - 2021.04.19
சீட்டிழுப்பு இலக்கம் - 493
L 04 28 31 33
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2751
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 15 27 66 71
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/04/19
சீட்டிழுப்பு இலக்கம் 4456
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 2 0 3 7 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0815
Y 08 10 24 27 30

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1676 திகதி 2021.04.19
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 11 49 74 86
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல: 1252
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 19.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 128,601,340
வெற்றி இலக்கங்கள் 30 45 58 71
ஆங்கில எழுத்து O
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல: 3582
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 19.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,571,221
வெற்றி இலக்கங்கள் 14 55 56 62
ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,686,449/=
திகதி: 19.04.2021
வெற்றி வாரம்: 3133
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 12 30 37 42
ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,439,280

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1426
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 19/04/2021
தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் K 12 55 72 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 52,225,256/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1750
சீட்டிழுப்பு திகதி 19.04.2021
வெற்றி இலக்கங்கள் 03 19 24 62
ஆங்கில எழுத்து A
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 24,422,592
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழம் உருவாகியிருந்தால் அனுமதித்திருப்போம்

## பகிரங்கமாக கூறினார் தம்பல அமில தேரர்

**(கொழும்பு)**

**தமிழீழம் உருவாக்கப்பட்டிருக்குமானால் அதனை ஆறுதல் வார்த்தையிலாவது அனுமதித்திருந்திருப்போம் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் செயற்பாட்டாளரான, ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் தம்பல அமில தேரர் தெரிவித்துள்ளார்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தின் ஊடாக தனிநாட்டை பெற்றிருந்தால், சர்வதேச அளவில் நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் சேதங்கள் கூட ஏற்பட்டிருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச ஹிட்லரைப் போல மாற வேண்டும். ஆனால் அவர் அவ்வகையில் இன்னும் மாறவில்லை என்று அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். அதுவே இன்றைய பிரச்சினை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆட்சிக்கு அவர் வரமுன்னரே அவர் ஹிட்லரைப் போல செயற்படுவார் என்றே சில பௌத்த பிக்குமார்களும் கூட தெரிவித்தனர். எனினும் ஹிட்லர் பற்றி நீங்கள் அறிந்து வைத்திருப்பது குறைவான விடயமே என்று கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகம் தெரிவித்திருக்கின்றது.

உண்மையில் ஹிட்லரைப் போல மாறினால் இறுதியில் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலையே செய்து கொள்ள நேரிடும். ஹிட்லர் இறுதியில் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டார். ஆகவே கோட்டாபயவும் சுட்டுத் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்றா இவர்கள் கூறுகின்றனர்? சில அமைச்சர்கள் இதனை இன்று அறியாமல் தெரிவிக்கின்றனர்.

இன்று கொழும்பு துறைமுக நகரத் திட்டம் ஒட்டுமொத்த நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு தாக்கம் செலுத்துகின்றது. தனிநாடாகவே அது உருவாகின்றது.

உண்மையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் போரின்போது தனி ஈழ நாட்டை பெற்று வெற்றிபெற்றிருந்தால் நாட்டிற்கு இவ்வளவு சேதமொன்று ஏற்பட்டிருக்காது.

எங்களோடு எமது நாட்டோடு இருப்பவர்கள் என்று நினைத்து விடுதலைப் புலிகள் தனிநாடாக செயற்படுவதை சரியென்றும் ஆறுதல் கூறியிருந்திருக்கலாம்.

எனினும் இப்போது போர்ட் சிட்டியை முழுமையாக தனிநாடாக சுவீகரித்துக்கொள்வதற்காக சீனா முயற்சிக்கின்றது. கோட்டாபயவுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களும் இன்று இதனை சிந்திக்க வேண்டும் என்றார். (ம-3)

# கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எமக்கு கட்டளையிட முடியாது

## அருட்தந்தை ஜெயபாலன்

(கொழும்பு)

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் எமக்கு கட்டளையிட முடியாது என மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதலின் இரண்டாம் வருட நினைவு தினம் நாளை அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நாளையதினம் இரண்டு நிமிட மௌன அஞ்சலியினை செலுத்தவேண்டும் எனவும் விசேட வழிபாடுகளை முன்னெடுக்குமாறும் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இலங்கை முழுவதும் உள்ள ஆயர்கள் மற்றும் அருட்தந்தையர்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

எனினும், பேராயர் மல்கம் ரஞ்சித் கொழும்பு மறைமாவட்டத்திற்குதான் ஆயர், எனவே எங்களுக்கு எவ்வித அறிவுறுத்தல்களை வழங்குவதென்றாலும் அதனை எமது மறைமாவட்ட ஆயரே வழங்க முடியும் என அருட்தந்தை ஜெயபாலன் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**வேலையாட்கள் தேவை**

தட்டச்சு தெரிந்த பெண் வேலையாட்கள் தேவை. (6634)

077 353 3809

**மணமகள் தேவை**

1979.02.07 இல் பிறந்த 5'6" உயரமுடைய சைவ சமய உயர் குலம், மிருகசீரிடம் 2 ஆம் பாதம், கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை. (6637)

077 330 1798

**பணிப்பெண் தேவை**

அராலியில் உள்ள வீடொன்றில் வயோதிபப் பெண்ணை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. (6638)

077 923 8976

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.

( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம். (6636)

077 814 7389

077 614 7333

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்.) (6639)

தொடர்பு கொள்ளும் நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை

077 468 3354, 077 288 0152, 077 203 6402

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1925)

0768226240 DHL

**31ஆம் நாள் நினைவலையில்**



எமது பாடசாலையின் உப அதிபர்

திருமதி விஜயலக்சுமி கௌரிதாசன்

அவர்களது அன்புக் கணவர்

அமரர்

கனகசபை கௌரிதாசன்

இந்நாளில் அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்

கிளி / கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

(C-2010)

**சிவப்பு மணல் விற்பனைக்கு உண்டு**

பள்ள நிலங்கள் சீர்செய்வதற்கும் வீட்டு அத்திபாரங்களை நிரப்புவதற்கும் உகந்த சிவப்பு நிற மணல் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்திற்கு கொண்டு வந்து வழங்கமுடியும்.

(C-2011)

தொடர்பு

077 649 1027

077 940 0963

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

(C-1895)

எமது கிளைகள்

கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 15'000/-

பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777

v2vacancies@gmail.com

**அன்னா** EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=

070 3305500

077 888 9388

(C-1927)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை

பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை.

மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.